திருக்கோயில்

செப்டம்பர்
2000

விலை
ரூபாய் ஐந்து

சென்னை இராயப்பேட்டை அருள்மிகு சித்திபுத்தி விநாயகர் ஆலயத்தில் 15.8.2000 அன்று சுதந்திரத் திருநாள் சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. இவ்விழாவில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகரத் தந்தை திருமிகு மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். சென்னை உதவி ஆணையாளர் திரு ஆ. சுப்பிரமணியன், எம்.ஏ., பிஎல். அவர்கள் உடன் உள்ளார்கள்.

திருக்கோயில்

திங்கள் இதழ்

தனி இதழ்	:	ரூ. 5.00
ஆண்டு உறுப்பினர் கட்டணம்	:	ரூ. 60.00
ஆயுள் உறுப்பினர் கட்டணம்	:	ரூ. 500.00

மாலை	திருவள்ளுவர் ஆண்டு 2031	விக்ரம ஆண்டு புரட்டாசி	மணி
42	செப்டம்பர் 2000		6

சிறப்பாசிரியர்

திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.
ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திரு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமதி மா. கவிதா, பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு தி. ஜெயராமன், பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.

முகப்பு

அருள்மிகு வீரபத்திரசுவாமி

பொருளடக்கம்

குறளில் ஆன்மீகம்
- திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப., ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

விநாயகர் 108 போற்றி

விநாயகனே வினை தீர்ப்பவனே - ''நஜன்''

''பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட''
- கலைமாமணி அருளரசு மாசிலாமணி

அருள்மிகு ஈச்சனாரி விநாயகர்
- பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியன்

சிவபெருமான் திருவருளும் கோளறு திருப்பதிகமும்
- மயிலை சிவஞானஜோதி சிவசக்தி அம்மையார்

பிணியேயறியோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
- பேராசிரியர் ஜே.ஜி. கண்ணப்பன்

வாசகர் எண்ணங்கள்

கன்கள் பார்ப்பதில்லை
- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

கைகொடுப்பாள் காளிகாம்பாள் - இராஜேசுவரி விசுவநாதன்

'சசிமகராஜ்' ஸ்ரீராமகிருஷ்ணானந்தர் தொண்டு
- டாக்டர் வ. ஹேமா

விளாவும் விடையும் - பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்

உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :
உயர்திரு ஆணையாளர் அவர்கள்
திருக்கோயில்
இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை
119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.
தொலைபேசி : *8279407*

குறளில் ஆன்மீகம்

- திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.,
இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் அவர்கள்

சேலம் அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில் அலுவலகக் கட்டிடத்தை, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்துக் குத்துவிளக்கேற்றிச் சிறப்பித்தார்கள். சேலம் இணை ஆணையாளர் திரு. தேனைய்யா, எம்.ஏ., பி.எல்., திருக்கோயில் அறங்காவலர்கள், சேலம் மாவட்ட அறங்காவலர் நியமனக் குழுத் தலைவர் திரு தி. பூபாலன் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

துறவறவியல் — *அதிகாரம் 34*

குறள் 336

நிலையாமை

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு:

இந்தக் குறளில் வள்ளுவர் யாக்கையின் நிலையாமை பற்றி நயம்பட எடுத்துச் சொல்லி இருக்கிறார். நேற்று இருந்த ஒருவன் இன்று இல்லை என்று பெருமையுடனும், அதிசயத்துடனும், அதிர்ச்சியுடனும் சிலர் கூறுவது இந்த இறப்பு நிகழ்ச்சியே ஆகும். நேற்று இருந்த ஒருவன் இன்று இல்லை என்றால் நேற்று இந்த நேரம் என்னுடன் பேசிக்கொண்டிருந்தான், என்னுடன் பயணம் செய்து கொண்டிருந்தான், என்னுடன் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தான், என்னுடன் திருக்குறள் வகுப்புக்கு வந்தான் என்றெல்லாம் இந்தச் செய்தியை அதிசயமாக சொல்லிச் சொல்லி வருத்தப்படுவார்கள். நடைமுறையில் குழந்தை இறந்து பிறப்பதைப் பார்க்கிறோம். பிறந்தவுடன் இறப்பதை பார்க்கிறோம். சிறிது காலம் இருந்து இறப்பதைப் பார்க்கிறோம். நீண்ட காலம் வாழ்ந்து இறப்பதையும் பார்க்கிறோம். இதை எல்லாம் பார்த்த பிறகும் மனிதர்கள் யாக்கையின் நிலையாமையை எண்ணாமல் இருப்பதற்கு மாயையினால் கிடைக்கின்ற சிறிதளவு இன்பம் ஒன்றே காரணமாகிறது. யார் எப்போது இறப்பார்கள் என்று தெரியாவிட்டாலும் குறித்த காலத்தில் இறந்து விடுகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. ''கொன் செய் மாறாத கூற்றுவன் வருவானே'' என்று சொல்லப்படுவது சொன்ன சொல் தவறாமல் எமன் வந்து தூல உடலில் இருந்து சூக்கும உடலைப்

பிரிப்பான் என்பதாகும். சூக்கும உடலைத் தூல உடலிலிருந்து பிரிப்பதைத்தான் உயிர் உடலை விட்டுப் பிரிந்து விட்டது என்று வழக்கத்தில் சொல்லப்படுகிறது. உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் ஒருவனுடைய மரணத்தை அவர் மீது வைத்து இருக்கின்ற அன்பினாலும் ஆர்வத்தினாலும் ''அகால மரணம்'' என்று சொல்லுகிறார்கள். இது உண்மையிலேயே பொருத்தமானது ஆகாது. சொன்ன சொல் தவறாமல் எமன் வருவதால் எல்லா மரணமுமே காலத்தில் ஏற்படுகின்ற மரணம் என்றே கருத வேண்டும்.

இல்லறவியல் அதிகாரம் 7

குறள் 63

மக்கட்பேறு

தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்.

இந்தக் குறளில் திருவள்ளுவர் இல்லறத்தின் அவசியத்தையும் கர்ம வினையின் முக்கியத்துவத்தையும் விளக்கிக் கூறியிருக்கிறார். ஒருவன் தான் விலைக்கு வாங்கிய பொருள்களான வீடு, நிலம், தோட்டம், வாகனம், நகைகள் ஆகியவைகள் எல்லாம் தன்னுடைய பொருள் என்று சொல்லிக் கொள்ள முடியாது. தன் ரத்த சம்பந்தமுள்ள மக்களைத் தான் தன் பொருள் என்று சொல்லிக் கொள்ள முடியும் என்று கூறியிருக்கிறார். இந்தப் பொருளானது எப்படி வருகிறது என்றால் தான் செய்த வினைக்கு ஏற்ப அமைகிறது. இதில், தான் செய்த முன் வினையே முக்கிய பங்கு வகிக்கிறது. நல்வினை செய்திருந்தால் நல்ல மக்களும், தீவினை செய்திருந்தால் தீய மக்களும் பெறுகிறார்கள் என்றும் தெரிகிறது. முன்வினையைப் பற்றி அறியக் கூடியவர்கள் சாமுசித்தர்கள் மட்டுமேயாதலால் சாதாரண மனிதர்கள் தான் பெற்ற மக்களின் தராதரத்தை வைத்துத் தான் செய்த வினையை யூகிக்க வேண்டி இருக்கிறது. இந்த மக்களை திருமணத்தின் மூலமாகத் தான் பெற முடியும். பெரும்பாலான பெற்றோர்கள் தன்னுடைய மகளோ மகனோ உடல் வளர்ச்சி அடைந்து விட்டால் அவர்களுடைய திருமணத்தைப்பற்றி சிந்திக்கிறார்கள். உண்மையில் இந்தத் தேவை இரண்டாவது பட்சத் தேவை தான் என்பதை நாம் அறிய வேண்டியிருக்கிறது. திருமணத்தின் முதல் தேவை மக்களைப் பெற்று மக்கள் மூலமாக முன் வினையை அறிய வாய்ப்புப் பெற வேண்டும் என்ற உண்மையை இந்தக் குறளில் திருவள்ளுவர் அறிவிக்கிறார். செய்கின்ற தவறைத் திருத்திக் கொள்வதற்கும், தவறுகளைச் செய்யாமல் இருப்பதற்கும், முன் வினையில் செய்த தவறுகளுக்காக பிராயசித்தமாகச் செய்ய வேண்டிய செயல்களை மேற்கொள்வதற்கும் மக்கட் செல்வம் அரிய வாய்ப்பாக இருக்கிறது. இதனால் தான் சான்றோர்கள் பன்னெடுங்காலமாக திருமணத்தை ''ஆயிரம் காலத்துப் பயிர்'' என்று அழகாகச் சொல்லுகிறார்கள்.

துறவறவியல் அதிகாரம் 27

குறள் 269

தவம்

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு

தவத்தினால் பெற்ற வலிமையின் காரணமாக ஒருவன் கூற்றுவனை அதாவது எமனை குதித்து ஓடச் செய்வது சாத்தியமாகும் என்று வள்ளுவர் கூறுகின்றார். அக ஒழுக்கமுள்ள இறைவனது அடியார்கள் செயற்கரிய செயல்களைச் செய்யக் கூடிய சக்திகளை இயல்பாகவே பெற்றுவிடுகிறார்கள். இதனாலேயே ஆற்றல் உள்ளவர்கள் சிலராகவும், ஆற்றல் இல்லாதவர்கள் பலராகவும் இருப்பதற்கான காரணத்தை வள்ளுவர் ''இலர் பலர் ஆகிய காரணம் நோற்பார் சிலர், பலர் நோலாதவர்'' என்று கூறியிருக்கிறார். இதிலிருந்து இறை சிந்தனையுடன் நோன்பினை மேற்கொள்பவர்கள் ஆற்றல் பெறுகிறார்கள் என்பது புலனாகிறது. குறித்த காலத்தில் எமன் தூல உடம்பிலிருந்து உயிரை உள் உடம்புடன் பிரித்து சென்று விடுவான் என்பது நம்பிக்கை மட்டும் அல்ல உண்மையானதும் ஆகும். எமனிடம் எக்காரணத்தைக் கொண்டும் ஒத்திவைப்பு வாங்க முடியாது. மணமேடையையே பிணமேடை ஆக்குவதற்கான சர்வசக்தி படைத்தவன் எமன். இந்த எமனை நெருங்க விடாமல் சிவபெருமானிடம் மார்க்கண்டேயன் தடையாணை பெற்றது அவருடைய பெற்றோர்களின் தவப் பயனும், மார்க்கண்டேயன் செய்த தவமுமே ஆகும். புராணத்தில் சொல்லப்படுகின்ற மார்க்கண்டேயன் 16 ஆண்டுக் காலம் மட்டுமே வாழ்வார் என்ற நிபந்தனையிலேயே தன்னுடைய பெற்றோர்களுக்கு மகனாக பிறந்தார். சொன்ன சொல் தவறாத கூற்றுவன் மார்க்கண்டேயனின் பூத உடலை இறக்கச் செய்வதற்கு வந்தபோது சிவபெருமான் ''என்றும் 16 ஆக இருக்கக் கடவாய்'' என்று அருள் பாலித்ததாக புராணத்தில் சொல்லப்படுகிறது. ஆனால் இன்று ஏன் இந்த மார்க்கண்டேயன் உயிருடன் இல்லை என்று சிலர் கேட்கலாம். மார்க்கண்டேயனுடைய கண் முன்னாலேயே அவருடைய சந்ததியினரெல்லாம் இறந்து விட்டதாலேயே மார்க்கண்டேயன் வாழ விரும்பாமல் தவ நிலை மேற்கொண்டு முக்தி அடைந்து விட்டார்

என்று நம்பப்படுகிறது. முக்தி அடைந்த ஜீவாத்மாக்களை இறைவனே அழைத்துச் செல்வதாகவும் மற்றவர்களை எமன் அழைத்துச் செல்வதாகவும், ஞானிகள் கூறுகின்றார்கள்.

நட்பியல் அதிகாரம் 85

குறள் 842

புல்லறிவாண்மை

அறிவிலான் நெஞ்சுவந்து ஈதல் பிறிதுயாதும்
இல்லை பெறுவான் தவம்.

அறிவிலான் ஒருவன், தகுதி இல்லாத அல்லது தகுதி குறைந்த வேறு ஒருவனுக்கு அரிய பொருள்களை மனமுவந்து கொடுப்பானேயானால் அதைப் பெறுகின்றவருடைய தவத்தின் பயனே என்று வள்ளுவர் கூறுகின்றார். தவம் என்று இங்கு சொல்லப்படுவது ஒருவன் முற்பிறவியிலே செய்த நல்வினை என்றே சொல்ல வேண்டும். இந்தக் காரணத்தினாலே தான் சில நேரம் நல்லவர்கள் துன்பப்படுவதையும், தீயவர்கள் இன்புற்றிருப்பதையும் பார்க்கிறோம். கிராமங்களிலே ஒரு பழமொழி சொல்லுவார்கள் ''பனைமரம் வைத்தவன் பார்த்து விட்டு சாவான், தென்னை மரம் வைத்தவன் தின்றுவிட்டு சாவான்''. என்று தென்னைமரம் சீக்கிரமே பயன் கொடுக்குமாதலால் தென்னை மரம் வைத்தவன் தேங்காயைத் தன் காலத்திலேயே பெறுவான். ஆனால் பனைமரம் பலன் கொடுக்கப் பல்லாண்டுக் காலம் ஆகுமாதலால் அதன் பலனை அனுபவிக்க இல்லாமல் போய்விடுவான் என்று சொல்லப்படுகிறது. இது போன்று ஒருவன் செய்கின்ற நல்வினைக்கோ அல்லது தீவினைக்கோ வினையின் தன்மையைப் பொருத்து இந்தப் பிறவியிலேயோ அல்லது அடுத்த பிறவியிலோ அல்லது பின்னால் வரும் பிறவியிலேயோ பலன் கிடைக்கிறது. இந்தசூட்சமத்தினாலே தான் முற்பிறவியிலே நல்ல வினையைச் செய்தவனுக்கு அறிவிலான் விருப்பத்துடன், பெறுபவன் தவத்திற்கேற்பப் பொருள்களை வழங்குகிறான். இங்கு அறிவிலான் என்று சொல்லப்படுவது புத்தியில்லாதவன் என்ற பொருளில் அல்ல. தகுதியைப் பார்க்காமலேயே கொடுக்கின்ற தயை உள்ளவன் என்று பொருள் கொள்ளவேண்டும். இந்த நேரத்தில் நாம் நினைவு கூற வேண்டிய விஷயம் என்ன என்றால் ''நல்வினை பொன் விலங்கு போலவும், தீவினை இரும்பு விலங்கு போலவும்'' ஒருவனுடைய ஆன்மீக வளர்ச்சியில் பங்கு கொள்கிறது என்பதுதான்.

இல்லறவியல் அதிகாரம் 15

குறள் 148

பிறனில் விழையாமை

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு.

பிறருடைய மனைவியைப் பார்க்காமல் தவிர்ப்பது அறம் மட்டும் இல்லாமல் சிறந்த ஒழுக்கமாகவும் கருதப்படுகிறது. அதைத் தான் உண்மையில் வள்ளுவர் ஆண்மை என்று கூறுகின்றார். பிறன் மனைவியை அல்லது பிற பெண்களை ஒருவன் பார்ப்பதற்கான வாய்ப்பு பொது இடங்களிலும், அலுவலகங்களிலும், பயணங்கள் செய்யும்போதும் ஏற்படுகிறது. இந்த வாய்ப்பைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது என்பது தான் இந்தக் குறள் கூறுகின்ற செய்தி ஆகும். உயிர் இனங்களுக்கெல்லாம் சூக்கும உடலைக் கொடுத்து இயக்க வைக்கின்ற காரணத்தினாலேயே கடவுள் ஒருவரே எல்லாருக்கும் தாயும், தகப்பனும் ஆகின்றார். மானுடத் தாய், தந்தையர்கள் தூல உடம்பு கொடுப்பதனால் அவர்களும் தாய், தந்தையர்கள் ஆகின்றனர். விதி விலக்காக ஒருவனுக்கு மனைவியோ ஒருத்திக்கு கணவனோ வாய்க்கச் செய்வது, உயிர் இனங்கள் அனுபவ அறிவைப் பெறுவதற்காக மட்டுமே இறைவனுடைய ஏற்பாடாக இருப்பதால் மற்ற அனைவருமே ஒருவனுக்கு சகோதர சகோதரியாக கருதப்பட வேண்டியவர்களாவார்கள். அப்படி என்றால் பிறன் மனைவியை சகோதரியாக பார்க்கலாம் என்றால் அதுவும் கூடக்கூடாது என்பதை வள்ளுவர் வலியுறுத்தியிருக்கிறார். இதற்குக் காரண காரியங்கள் இல்லாமல் இல்லை. பழகுவதால் நண்பனுடைய மனைவியை மட்டுமே சகோதரியாகப் பார்க்கலாம் என்று பொருள் கொள்ளலாம். திருக்கோஷ்டி நம்பிகளின் மகள், தன்னுடைய தகப்பனாரிடம் பாடம் கேட்க வந்த மகான் ஒருவர் தன்னை முறைத்து பார்க்கின்றார் என்று முறையிட்டதற்கு நம்பிகள், மகானின் கண்ணுக்கு அவள் பரிபூரணமாக ஆண்டாளாகவே காட்சி அளித்ததாகவும் அதனால் அவளை ஆண்டாளாகக் கருதியதாகவும் மகளிடம் கூறி அவளுடைய புகாரைப் பொருட்படுத்தவில்லை. இந்த எடுத்துக்காட்டு அடியார்களுக்கு மட்டுமே பொருந்துமே ஒழிய சாதாரண மனிதர்களுக்குப் பொருந்தாது என்று அறிய வேண்டும். இதனால் பிறன் மனைவியை நோக்காமல் இருப்பதே அறமாகவும், ஒழுக்கமாகவும், ஆண்மையாகவும் கருதப்படும் என்ற பொதுவான கருத்து எல்லோருக்கும் ஏற்புடையதே.

★★★

அருள்மிகு விநாயகர் போற்றி

(சங்கற்பம்)

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய இந்நன் னாளில் .... அவர்களுக்கும், அவர்கள் குடும்பத் தார்க்கும், சுற்றத்தார்க்கும் சமூகத்தார்க்கும், உலகுயிர் கட்கும், அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற் பயனும் பொருந்தி நன்னிலை எய்தவும், நீண்ட வாழ்நாள் பெருகவும், திருவருள் பெருகவும், மங்கல வாழ்வெய்தவும்

உமது திருவடிகளில்
மலர் தூவி வழிபாடு செய்கின்றோம்.

★★★

அருள்மிகு விநாயகர் 8 போற்றிகள்

1. ஓம் அகரமென நிற்பாய் போற்றி
2. ஓம் அறுகு சூடிய அமலா போற்றி
3. ஓம் ஆனை முகத்தனே போற்றி
4. ஓம் உண்மையர் உள்ளொளியே போற்றி
5. ஓம் ஐந்து கரத்தனே போற்றி
6. ஓம் கற்பக விநாயகா போற்றி
7. ஓம் சங்கத்தமிழ் தருவாய் போற்றி
8. ஓம் வைத்த மாநிதியே போற்றி போற்றி

★★★

அருள்மிகு விநாயகர் 16 போற்றிகள்

1. ஓம் அகரமென நிற்பாய் போற்றி
2. ஓம் ஆதார கணபதி போற்றி
3. ஓம் ஆரண முதலே போற்றி
4. ஓம் ஆனை முகத்தனே போற்றி
5. ஓம் இடையூறு நீக்குவாய் போற்றி
6. ஓம் உண்மையர் உள்ளொளியே போற்றி
7. ஓம் ஐந்து கரத்தனே போற்றி
8. ஓம் ஓமெனும் பொருளே போற்றி
9. ஓம் கற்பக விநாயகா போற்றி
10. ஓம் சங்கத் தமிழ் தருவாய் போற்றி
11. ஓம் சித்தி விநாயகா போற்றி
12. ஓம் தத்துவ முதலே போற்றி
13. ஓம் பரம தயாளா போற்றி
14. ஓம் முக்கட் கரும்பே போற்றி
15. ஓம் வெற்றித் திருவே போற்றி
16. ஓம் வைத்த மாநிதியே போற்றி போற்றி

★★★

அருள்மிகு விநாயகர் 108 போற்றிகள்

1. ஓம் அகரமென நிற்பாய் போற்றி
2. ஓம் அங்குசக் கரத்தாய் போற்றி
3. ஓம் அடியார்க் கெளியாய் போற்றி
4. ஓம் அமரர்கள் நாதா போற்றி
5. ஓம் அறிவானந்த உருவே போற்றி
6. ஓம் ஆதார கணபதி போற்றி
7. ஓம் அறுகு சூடிய அமலா போற்றி
8. ஓம் ஆதார கணபதி போற்றி
9. ஓம் ஆரண முதலே போற்றி
10. ஓம் ஆனை முகத்தனே போற்றி
11. ஓம் இடர்தனைக் களைவாய் போற்றி
12. ஓம் இடும்பை கெடுப்பாய் போற்றி
13. ஓம் இடையூறு நீக்குவாய் போற்றி
14. ஓம் இமயச் செல்வியின் சேயே போற்றி
15. ஓம் இளம்பிறை போலும் எயிற்றினாய் போற்றி
16. ஓம் ஈசனார் மகனே போற்றி
17. ஓம் உண்மையர் உள்ளொளியே போற்றி
18. ஓம் உத்தமி புதல்வா போற்றி
19. ஓம் உயிரினுக்குயிரே போற்றி
20. ஓம் உய்வருள் பெருமாள் போற்றி
21. ஓம் உலகெலாம் ஆனாய் போற்றி,
22. ஓம் உலவாத இன்பமே போற்றி
23. ஓம் உலைவிலாக் களிறே போற்றி
24. ஓம் உள்ளமுயர்த்துவாய் போற்றி
25. ஓம் உள்ளத்தறியில் உள்ளாய் போற்றி
26. ஓம் உள்நிறை ஒளியே போற்றி
27. ஓம் எண்டோளன் செல்வா போற்றி
28. ஓம் எண்ணிய ஈவாய் போற்றி
29. ஓம் எழில்வளர் சோதி போற்றி
30. ஓம் என்னுயிர்க் கமுதே போற்றி
31. ஓம் ஏழைக்கிரங்குவாய் போற்றி
32. ஓம் ஐந்து கரத்தனே போற்றி

33. ஓம் ஒளிபெற அருள்வாய் போற்றி
34. ஓம் ஒற்றைக் கொம்பனே போற்றி
35. ஓம் ஓமெனும் பொருளே போற்றி
36. ஓம் கங்கை வேணியா போற்றி
37. ஓம் கணநாத கற்பகா போற்றி
38. ஓம் கணபதிக் களிறே போற்றி
39. ஓம் கயமுகற் கடிந்தோய் போற்றி
40. ஓம் கருவிலும் காப்பாய் போற்றி
41. ஓம் கற்றோர் கருத்தே போற்றி
42. ஓம் கற்பக விநாயகா போற்றி
43. ஓம் காங்கேயன் தமையா போற்றி
44. ஓம் காலங்கடந்தோய் போற்றி
45. ஓம் காவிரிதரு சீரோய் போற்றி
46. ஓம் கிளரொளி வடிவே போற்றி
47. ஓம் குஞ்சரக் குரிசில் போற்றி
48. ஓம் கூவிள மாலையாய் போற்றி
49. ஓம் கைப்போதகமே போற்றி
50. ஓம் சக்கரந் தரித்தோய் போற்றி
51. ஓம் சங்கத்தமிழ் தருவாய் போற்றி
52. ஓம் சந்திர சேகரா போற்றி
53. ஓம் சித்தத் தேனே போற்றி
54. ஓம் சித்தி விநாயகா போற்றி
55. ஓம் சித்தி புத்தி மணாளா போற்றி
56. ஓம் சிவ கணபதியே போற்றி
57. ஓம் சீர்பெற அருள்வோய் போற்றி
58. ஓம் செல்வக் கணேசா போற்றி
59. ஓம் செல்வமருள்வோய் போற்றி
60. ஓம் செல்வ நீறு தருவாய் போற்றி
61. ஓம் சேமம் தருவோய் போற்றி
62. ஓம் ஞானக் கொழுந்தே போற்றி
63. ஓம் தத்துவ முதலே போற்றி
64. ஓம் தத்துவப் பேறுதருவாய் போற்றி
65. ஓம் தந்தி முகனே போற்றி
66. ஓம் தந்தையாக் காப்பாய் போற்றி
67. ஓம் தழைத்திட வருவாய் போற்றி
68. ஓம் தற்பர விநாயகா போற்றி
69. ஓம் தாரக மறையே போற்றி
70. ஓம் துப்பார் மேனியனே போற்றி
71. ஓம் தொண்டர்தம் துணையே போற்றி
72. ஓம் நச்சினார்க்கினியோய் போற்றி
73. ஓம் நந்திமகனே போற்றி
74. ஓம் நாத முடிவே போற்றி
75. ஓம் நாவமர் பாட்டே போற்றி
76. ஓம் நான்ற வாயினை போற்றி
77. ஓம் நிறைவாழ்வருள்வாய் போற்றி
78. ஓம் நூற்பொருள் அளிப்பாய் போற்றி
79. ஓம் நெஞ்சநோய் தீர்ப்பாய் போற்றி
80. ஓம் பகையினைக் களைவாய் போற்றி
81. ஓம் பண்ணிடைத் தமிழே போற்றி
82. ஓம் பண்பிலார்க்கு அரியாய் போற்றி
83. ஓம் பரம தயாளா போற்றி
84. ஓம் பரிதிபோல் மதிதருவாய் போற்றி
85. ஓம் பாதிமதி சூடி போற்றி
86. ஓம் பிணிகள் களைவாய் போற்றி
87. ஓம் பிரணவக் களிறே போற்றி
88. ஓம் பிள்ளைகள் தலைவா போற்றி
89. ஓம் புண்ணிய மூர்த்தி போற்றி
90. ஓம் பேழை வயிற்றினாய் போற்றி
91. ஓம் பையரவசைத்தாய் போற்றி
92. ஓம் போக நாயகா போற்றி
93. ஓம் போத வடிவே போற்றி
94. ஓம் மணிநீல கண்டா போற்றி
95. ஓம் மன்றாடி மைந்தா போற்றி
96. ஓம் மாசிலா மணியே போற்றி
97. ஓம் முக்கட் கரும்பே போற்றி
98. ஓம் முடியா முதலே போற்றி
99. ஓம் முத்தமிழ் முதல்வா போற்றி
100. ஓம் மெய்ப்பொருள் நீயே போற்றி
101. ஓம் மோதகக் கையினாய் போற்றி
102. ஓம் யாவு மானாய் போற்றி
103. ஓம் யோகியர் தலைவா போற்றி
104. ஓம் வல்லமை வல்லவா போற்றி
105. ஓம் விகடசக்கர விநாயகா போற்றி
106. ஓம் விண்மழை தருவாய் போற்றி
107. ஓம் வெற்றித் திருவே போற்றி
108. ஓம் வைத்த மாநிதியே போற்றி போற்றி.

★★★

பாடல் : விநாயகர்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

வாழ்த்துடன் பிரசாதம் அளித்தல்

அருள்மிகு விநாயகப் பெருமான் அருள் முழுமையாக உங்களுக்குக் கிடைப்பதாகுக, உங்களின் எல்லா விருப்பமும் நிறைவேறுக, மங்கலம் உண்டாகுக.

விநாயகனே வினை தீர்ப்பவனே

– ''நஜன்''

விநாயகர், கணபதி என்றழைக்கப்படும் தும்பிக்கையுடைய இந்தத் தெய்வத்தை வழிபடுபவர்களுக்கு நல்ல மனம் உண்டாகும். நன்கு பேசும் திறமை ஏற்படும். நல்ல சிந்தனை உருவாகும். லட்சுமி கடாட்சம் ஏற்பட்டு ஐசுவரியம் உண்டாகும். அருள் பார்வை ஏற்படும். நோய் நொடி ஏற்படாது.

இந்தப் பிள்ளையாரைப் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்குமே! முச்சந்தியில், குளக்கரையில், ஆற்றங்கரையில் கோயில்களில் அவரை நீங்கள் பார்க்காமல் இருக்க முடியாது. அவரது யானைமுகமும் பெரிய வயிறும் பிள்ளையார் என்றதுமே உங்கள் மனக் கண் முன் வருமே!

யானை என்றாலே உங்களுக்கெல்லாம் பார்க்கப் பிரியம். அதைப் பார்க்க ஓடுவீர்கள். எங்கள் ஊர்த் திருவிழாவின் போது யானை வரும். பத்து நாள் இருக்கும். அதைப் பார்த்துக்கொண்டே இருப்போம். எத்தனை தரம் பார்த்தாலும் அலுக்காது. குழந்தைகள் யானையை விரும்புவது போல, குழந்தைக் கடவுளாகவும் உள்ளவர் பிள்ளையார்.

அந்தக் கணபதிக்கு பிள்ளையார் என்று ஒரு பெயரும் உண்டு. இப்பெயரிலிருந்தே அவர் யாருக்கோ பிள்ளை என்று தெரிகிறதல்லவா? யாருக்கு? பார்வதிக்கும் பரமசிவனுக்கும்தான். உலகத் தாய் தந்தையான அந்தப் பெரியவர்களின் பிள்ளை யாதலால் அவரை மரியாதையுடன் பிள்ளையார் என்கிறார்கள்.

நம்மிடையே ஒரு பெரிய மனிதரான செட்டியை செட்டியார் என்று அழைக்கிறோம். முதலி வகுப்பினரை முதலியார் என்கிறோம். அது போலவே அப்பிள்ளையுடன் ஆர் சேர்த்து பிள்ளையார் என்றழைக்கிறோம்.

விடுகதை ஒன்று சொல்வதுண்டு. ''இரண்டு கால் இருக்கும் ஒரு கண் இருக்கும். கொஞ்சம் பாக்கு தின்பாள் அது என்ன?'' என்பது கேள்வி. பாக்கு வெட்டிதான் இதற்கு விடை.

அதுபோல ஒரு பாட்டி ஒரு புதிர் போட்டாள்.

சங்கரிக்கு மூத்த பிள்ளை
சங்கரனார் பெற்ற பிள்ளை
இப்பிள்ளை யார் சொல்?
பேரப் பையன் பதில் : பிள்ளையார்.

இப்படி குழந்தை வயதிலேயே உங்களுக்குத் தெரிந்த பிள்ளையார் பற்றி பள்ளியிலும் குறிப்பிட்டிருப்பார்கள்.

இந்தப் பிள்ளையாரைப் பற்றி மேலும் தெரிந்து கொள்வோம்.

''ஓம்'' என்ற உருவில் தோற்றம்

கைலாசத்தில் இளவேனிற் காலத்தில் சிவ பெருமானும் உமாதேவியும் சிங்காரவனத்தில் இயற்கை அழகுகளைப் பார்த்து மகிழ்ந்து சிற்ப மண்டபத்தில் நுழைந்தார்கள். அங்குள்ள சித்திரங்களில் ஒன்று ''ஓம்'' என்ற பிரணவ வடிவத்தை யானை வடிவங்களில் விசித்திரமாக சித்தரித்துக் காட்டியது. சிவனும் உமையும் அச்சித்திரத்தை ஊன்றிக் கவனித்தனர். உடனே அப்பிரணவ சித்திரத்திலிருந்து ஒரு ஜோதி தோன்றியது. அதன் மத்தியில் கணபதி, ஜோதி மயமானக் குழந்தையாகத் தோன்றினார்.

விநாயகர் பிறப்பைக் குறித்து மேலும் பல வரலாறுகள் வழங்கி வருகின்றன.

சனி பகவானின் பார்வையால் விநாயகரின் தலை நீறாகி விட்டதாகவும், வேறு யானை தலை பொருத்தப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

கணபதி பிறந்த செய்தியைக் கேட்டு எல்லாத் தேவர்களும் அவரைப் பார்க்கப்போனார்கள். சனீஸ்வரனும் போயிருந்தார். ஆனால் குழந்தையைப் பார்க்காமல் தலையைக் குனிந்து கொண்டிருந்தார். ''ஏன் இப்படித் தலை குனிந்து கொண்டிருக்கிறீர்?'' என்று பார்வதி கேட்டாள்.

''நான் பாக்கியமில்லாதவன், நான் பார்த்தால் குழந்தைக்குக் கேடு விளையலாம்'' என்றார் சனி.

''அப்படியும் ஒரு சாபமா? எப்படி ஏற்பட்டது.'' என்று தேவி கேட்டாள்.

''என் மனைவி இட்ட சாபம் அது'' என்றார் சனி.

''அந்த சாபம் எல்லாம் இங்கு எடுபடாது. நீங்கள் குழந்தையைப் பார்க்கலாம்'' என்று தேவி சொல்ல, சனியும் பார்க்க, குழந்தையின் தலை நீறாகி

விட்டது. விஷ்ணு ஒரு யானையின் தலையை வைத்துப் பொருத்திவிட்டார்.

பிறப்பு இல்லாத விநாயகருடைய பிறப்பைப் பற்றி இப்படிப் பல விதமாகக் கூறுகின்றன புராணங்கள்.

பால லீலைகள்

கிருஷ்ண பரமாத்மா குழந்தைப் பருவத்தில் தன் லீலைகள் மூலமே விளையாட்டாகப் பல அசுரர்களைக் கொன்றிருக்கிறார் என்று படித்திருக்கிறோம். அம்மாதிரி கணபதி செய்த லீலைகள் பல.

இவர் குழந்தையாக இருக்கும்போது ஒரு அசுரன் இவரைத் தூக்கிக் கொண்டு வானத்தில் பாய்ந்தான். குழந்தை அவன் காதுகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. அசுரன் அலறினான். ஆனால் கணபதி பிடியை விடவில்லை. குழந்தையைக் கீழே வீச அவன் முயன்றான். ஆனால் கணபதி காதை விடாமல் அவன் மார்பில் ''விண் விண்'' என்று உதைக்க அசுரன் அந்த உதை தாங்காமல் உயிரை விட்டான். இவனே குரூரன் என்ற அசுரன்.

புராண உலகில் முதல் பெரும் போரான தேவாசுர யுத்தம் நடந்து கொண்டிருந்தது. மிக பலசாலியான சிந்து என்பவன் அசுரர்களுக்கு உதவியாக இருந்தான்.

இந்த சிந்து வரபலம் பெற்றவன். மூன்று உலகங்களையும் ஆண்டு வந்தான். இவன் ஆட்சியில் ஜபம், தவம், யாகம், தியாகம் எதுவும் கிடையாது.

இந்த சிந்துவை தனியாகப் போரிட்டுக் கொன்றவர் கணபதி, இதனைக் கண்டு பரமசிவனே ''வீரகோர சூர சம்ஹார சித்தி விநாயகர்'' என்று வாயார வாழ்த்தினாராம்.

இம்மாதிரி பல அசுரர்களை கணபதி தீர்த்துக் கட்டியிருக்கிறார்.

''அரனவன் இடத்தில் ஐங்கரன் வந்து தான்
''ஐயா, என் செவியை மிகவும்
அறுமுகன் கிள்ளினான்'' என்றே சிணுங்கவும்
அத்தன் வேலவனை நோக்கி
விரைவுடன் வினவவே அண்ணன் என்சென்னியில்
விளங்கு கண் எண்ணினன் என
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்து நீஅப்படியும்
விகடம் ஏன் செய்தாய் என
மருவும் என் கைந்நீளம் முழம் அளந்தான் என்ன
மயிலவன் நகைத்து நிற்க
மலையரையன் உதவவரும் உமையவளை
நோக்கி நின்
மைந்தரைப் பாராய் எனக்

கருது அரிய கடல் ஆடை உலகு பல அண்டம்
கர்ப்பமாய் பெற்ற கன்னி
கணபதியை அருகு அழைத்து அகமகிழ்வு
கொண்டனள்
களியுடன் உமைக் காக்கவே.''

- சிவப்பிரகாசர்

கணபதியும் முருகனும் குழந்தைப் பருவத்தில் ஒருவரோடொருவர் சண்டை போட்டுக் கொண்டும் இருக்கின்றனர்.

ஒரு சமயம் கணபதி அழுது கொண்டே வந்தார். தம்பி தன் காதைக் கிள்ளி விட்டான் என்பது புகார்.

முருகனைக் கூப்பிட்டனுப்பி ''அண்ணன் காதைக் கிள்ளலாமா?'' என்று கேட்டாள் அம்பிகை.

''அவன் மட்டும் என் கண்களை எண்ணலாமா'' என்றான் முருகன்.

''என்ன கணபதி அப்படி எண்ணலாமா?'' என்று கேட்டார் தந்தை.

''அவன் மட்டும் என் துதிக்கையை முழம் போடலாமா? என்றார் கணபதி.

அன்னையும் அப்பனும் பூரித்துப் போயினர்.

சிவப்பிரகாச சுவாமிகள் இக்காட்சியை மிக அழகாக மேற்கண்டவாறு பாடியிருக்கிறார்.

யானை முகம் ஏன்?

பிள்ளையாருக்கு யானை முகம் இருக்கிறது. உடல் மனிதர் போல இருக்கிறது. கால்கள் குச்சிபோல் இருக்கிறது. இது ஏன்?

கடவுளுக்கு எவ்விதமான உருவமும் கிடையாது. ஆனால் எல்லா ரூபங்களாகவும் விளங்குகிறார். உலக உருவினங்கள் எல்லாவற்றையும் ஏழு வகையாக இறைவன் பிரித்திருக்கிறார். இவற்றில் மனித உருவம் ஆறாவது. தேவ உருவம் ஏழாவது. இந்த எல்லா உருவமாகவும் அவர் விளங்குகிறார்.

கடவுள் கருணை மிக்கவர். இவர் இந்த யானை முகத்துடன் விளங்கக் காரணம் கஜமுகாசுரன் என்பவனே.

கஜமுகன் சம்ஹாரம்

விநாயகர் சம்ஹரித்த அசுரர்களில் கஜமுகன் என்பவன் மிக முக்கியமானவன். இவன் அசுரப் பெண் ஒருவனுக்கும் ஒரு முனிவருக்கும் பிறந்தவன். இவன் சிவபெருமானைக் குறித்துத் தவம் இருந்து ஆயுள்பலமும் வரபலமும் பெற்றவன். அந்தச் சக்தியை அசுர சக்தியாக்கி ஹிம்சை நெறியில் உபயோகித்து விண்ணுலகையும் மண்ணுலகையும் அடிமைப்படுத்த முயன்றான்.

இவன், மிருகத்தினால் மரணம் கூடாது, மனிதனால் சாவு கூடாது. பூதகணங்களால் கூடாது. ஆயுதங்களினால் கூடாது என்றெல்லாம் வரம் பெற்றான். தேவர்கள் கஜமுகனின் கொடுமை தாங்காமல் கணபதியிடம் முறையிடவே அவர் தேவர்களுக்கு உதவ முன்வந்தார்.

கணபதியை யானை முகத்தைக்கொண்டு மிருகம் என்று சொல்ல முடியாது. மனித உடலைக் கொண்டு மனிதன் என்று சொல்ல முடியாது. கால்களைக் கொண்டு கணம் என்று சொல்ல முடியாது. அவன் வரத்திற்கு ஏற்ப விநாயகர் அவனை சம்ஹரிக்க உடலமைப்பும் அமைந்தது. ஆயுதங்களால் மரணமில்லை. ஆகவே, தன் கொம்புகளிலே ஒன்றை ஒடித்தே அதையே ஆயுதமாக்கி அவனை சம்ஹரித்தார்.

இக்கஜமுகன் செய்த கொடுமைகளில் ஒன்று தேவர்களை அடிமையாக நடத்தியது.

இந்திரன் முதலிய தேவர்கள் காலை, உச்சி, மாலை என்ற மூன்று நேரங்களிலும் தன் முன் காதுகளைப் பிடித்துக் கொண்டு 1008 முறை தோப்புக்கரணம் போடவேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்தினான். இந்தத் தொல்லையிலிருந்து விடுபட தேவர்கள், விநாயகரைத் தோத்திரம் செய்தார்கள். என்ன வரம்வேண்டுமென்று கணபதி கேட்டபோது, ''இதுவரை அசுரன் முன்போட்ட தோப்புக்கரணத்தை உங்கள் முன் போடுகிறோம்'' என்றார்கள்.

கணபதி ''தாராளமாகப் போடுங்கள். ஆனால் மூன்று முறை போட்டால் போதும்'' என்று அருள் புரிந்தார்.

விநாயகர் முன் தோப்புக்கரணம் போடுவதால் அறிவு வளர்ச்சியும் உடல் நலமும்உண்டாகி அவருடைய திருவருளுக்கும் உரியவர்களாகலாம்.

மாம்பழச் சண்டை

தன் இரண்டு பிள்ளைகளில் யார் கெட்டிக்காரர் என்ற வாக்கு வாதம் சிவனுக்கும் பார்வதிக்குமிடையே ஏற்பட்டது. ஒரு போட்டி வைப்பது என்றும் வெற்றி பெறுபவர்களுக்கு ஒரு மாம்பழம் பரிசு அளிப்பது என்றும் அத்தெய்வ தம்பதிகள் தீர்மானித்தனர்.

மாம்பழத்தைத் தந்தை கையில் கண்டவுடனே முருகனும் கணபதியும் அதைத் தனக்கே தான் தர வேண்டும் என்று போட்டியிட்டனர்.

உலகங்களை எல்லாம் யார் முதலில் சுற்றி வருகிறார்களோ அவர்களுக்கே இந்த மாம்பழம் என்றார் சிவபெருமான்.

தன்னிடம் தான், மயில் வாகனம் இருக்கிறதே! படுவேகமாகப் போய் உலகப் பிரதட்சிணத்தை சீக்கிரமே முடித்து விடலாம் என்ற நம்பிக்கையில் மயில் மீது ஏறிப்போய் விட்டார் முருகன்.

எவ்வளவோ வேகமாகத்தான் சுற்றி வந்தார். ஆனால் அவர் வந்தபோது கணபதி மாம்பழத்தை வாங்கிக் கொண்டிருந்தார்.

முருகனைப் போல் கணபதி உலகங்களை எல்லாம் சுற்றிவரவில்லை. அன்னையையும் பிதாவையும் வலம் வந்தார். பழம் கொடுங்கள் என்றார். சிவபெருமான் கொடுத்துவிட்டார்.

அம்பிகை, மகனின் சாமர்த்தியத்தைக் கண்டு புன்னகை செய்தாள். இந்த சிவ சக்திகள் இல்லாத உலகமா வெளியில் இருக்கிறது?

எங்கும் அணுவுக்குள் அணுவாக இருக்கும் இறைவனை வலம் வந்தாலே உலகங்கள் அனைத்தையும் வலம் வந்ததாகத் தானே அர்த்தம்.

இதைக் கவி சுப்ரதீபர்

அக்கனி தரச் சொல்லி
அப்பனே வலத்தில் வரும்
கைக் கஜமுகக் கடவுள்

என்று பாடியிருக்கிறார். எனக்கே வெற்றி நிச்சயம். கொடுங்கள் அக்கனியை, என்று சொல்லிக்கொண்டே வலம் வந்தாராம் விநாயகர். அவ்வளவு தன்னம்பிக்கை.

முருகனுக்கு அக்கனி கிடைத்திருந்தால் நமக்குத் தண்டபாணி கிடைத்திருக்க மாட்டார். முருகன் கோபித்துக் கொண்டு கோவணாண்டியாகப் புறப்பட்டு விட்டார். பழம் உனக்கு எதற்கு? நீயே பழமாயிற்றே, பழம் நீ (பழநி) என்று அம்பிகை எவ்வளவு சொல்லிப்பார்த்தும், முருகன் கேட்கவில்லை. மலையின் மீது ஆண்டியாக அன்பர்களுக்கு அருள் வழங்கி நிற்கிறான்.

அச்சு முறிந்தது ஏன்?

தந்தையாகிய சிவபெருமான் தன் மகன் முருகனிடமே உபதேசம் பெற்றவர். அதே போல விக்கினங்களை போக்கிக் கொள்ள கணபதியை அவர் பூஜை செய்திருக்கிறார்.

விநாயக பூஜை செய்யாமல் சிவபெருமான் திரிபுர தகனத்திற்குப் புறப்பட்டார். விநாயகரை நினைக்கக் கூட நேரமில்லை. உலக சேமத்தை நினைத்துக் கொண்டு மிக அவசரமாகப் புறப்பட்டார். விநாயகருக்கு கோபம் வந்து விட்டது. தேரின் அச்சை முறித்து விட்டாராம். அச்சு என்பது தேரின் சக்கரங்களைப் பிணைக்கும் கட்டை. தேரின் சக்கரம் வெளி வந்து விடாமல் தடுக்கும் ஒரு ஆணி போன்ற இரும்பு அச்சாணி. உருவம் சிறிதேயானாலும் இந்த அச்சாணி இல்லை என்றால் அந்த மாபெரும் தேர் ஓடாது.

சிவபெருமான் விநாயகரை வழிபடவே அந்த விக்னம் நிவர்த்தியாயிற்று.

இதைத்தான் அருணகிரி நாதர்

''முப்புரம் எரிசெய்த
அச்சிவன் உறை ரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா''

என்று பாடுகிறார்.

சிவபெருமானின் தேர்அச்சு இற்றுப்போன இடம்தான் இன்றும் அச்சிறுப்பாக்கம் என்று சொல்லப்படுகிறது.

வள்ளி கல்யாணத்திற்கு உதவியவர்

தேவேந்திரன் மகள் தேவசேனாவை மனைவியாகப் பெற்ற பின்பும் பூலோகத்தில் ஒரு குறப்பெண்ணிடம் முருகனுக்கு காதல். அந்த குறப்பெண் வள்ளி அவர்கள் குல வழக்கப்படி தினைப்புனம் காத்து வந்தாள்.

எப்போதுமே பருவ மங்கைகள் இருக்கும் இடத்திற்கு குழந்தைகள் போகலாம். கிழவன் போகலாம். இது தெரிந்த முருகன் கிழவர் ரூபத்தில் வள்ளியிடம் சென்று பேச்சு கொடுத்தார். ஆனால் அவர் காரியம் வெற்றி பெறவில்லை.

வள்ளியிடம் பேச்சுக் கொடுத்து அவளுக்கு யானையிடம் மிகப் பயம் என்பதைத் தெரிந்து கொண்டார். தன் தமையனை நினைத்தார். அவர் யானை முகக் கடவுளாகத் தோன்றவில்லை. யானையாகவே வந்து விட்டார். உயிரைக் காப்பாற்றிக் கொள்ள பயம் காரணமாக ஓடிவந்து வள்ளி, கிழவரைக் கட்டிக் கொண்டாள். தன்னைநாடி வந்த கிழவர், தான் கணவனாக அடைய விரும்பும் முருகனே என்பது வள்ளிக்குத் தெரிய வந்தது. இந்த விதமாக விக்னத்தை உண்டாக்கியும் போக்கியும் திருமணத்தை நடத்தி வைத்தார் கணபதி.

குட்டுப்பட்ட பிள்ளையார்

அயோத்தியில் ராமர் பட்டாபிஷேகம் ஆனபின் விபீஷணனுக்கு ராமர் விடை கொடுத்து அனுப்பும் போது இட்சுவாகு வம்சத்தின் குலச்செல்வமான ஸ்ரீரங்கநாதர் விக்ரகத்தைக் கொடுத்து வழிபட்டுக் கொண்டுவரும்படி அனுக்கிரஹித்தார்.

இத்தெய்வத் திருஉருவைப் பெற்றுக் கொண்டு விபீஷணன் இலங்கை நோக்கிப் பயணமானான். தமிழ்நாட்டின் வழியே அவன் போய் கொண்டிருக்கும் போது இந்த அருமையான செல்வத்தைத் தமிழ் நாட்டிலேயே நிலை நிறுத்த வேண்டும் என்று கணபதி திருவுளம் கொண்டார். காவேரிக் கரையில் விபீஷணன் வந்தபோது ஒரு சிறுவனாக அவன் முன் தோன்றினார் பிள்ளையார்.

விக்கிரகத்தை யாரிடமாவது ஒப்படைத்து விட்டு ஸ்நான பானாதிகளை முடிக்க விரும்பிய விபீஷணனுக்கு சிறுவனைக் கண்டதும் மகிழ்ச்சியுண்டாயிற்று. ''தம்பி! இந்த விக்கிரகத்தைக் கீழே வைக்காமல் கையிலேயே வைத்திருக்க வேண்டும், நான் சீக்கிரமே வந்து விடுகிறேன்'' என்றான்.

விபீஷணன் சிறிது தூரம் போனதும் அச் சிறுவன் ரங்கநாத விக்கிரகத்தைக் கீழே வைத்து விட்டான். இதைக் கண்டதும் விபீஷணன் ஓடிவந்து விக்கிரகத்தை தூக்கப் பார்த்தான். என்ன செய்தும் அசைக்க முடியவில்லை. சிறுவனைத் தண்டிக்க விபீஷணன் ஓடினான். சிறுவன் அருகிலிருந்த திருச்சி மலையில் ஏறி உச்சியில் போய் உட்கார்ந்து விட்டான். விபீஷணன் அவரைப் பிடித்து அவர் தலையில் குட்டினான். பின்னர்தான் அவர் விநாயகர் என்று தெரிந்தது. இந்தப் பிள்ளையாரே மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையாராக இருந்து அருள் பாலிக்கிறார்.

திருவரங்க நாதனைகாவேரிக்கரையில் இருக்கச் செய்த பெருமை விநாயகரையே சேரும்.

இராவணனிடம் குட்டுப்பட்டார்

இராவணன் சிவபெருமானைக் குறித்து தவம் செய்து அவரிடமிருந்து ஒரு சிவலிங்கத்தைப் பெற்று எடுத்துக் கொண்டு வந்தான். இவனும் காலைக் கடன்களை முடிக்க எண்ணினான். அங்கு சமய சஞ்சீவியாக விநாயகர் ஒரு சிறுவன் உருவில் தோன்றினார். ''பையா! இந்த சிவலிங்கத்தைக் கொஞ்சநேரம் கையில் வைத்திரு. கீழே வைக்கக் கூடாது'' என்றான் இராவணன்.

''எனக்கு வேறு வேலை இருக்கிறது. நீங்கள் சீக்கிரமே வந்துவிடவேண்டும்'' என்றான் அச் சிறுவன்.

இதற்கிசைந்து இராவணன் லிங்கத்தைக் கொடுத்து விட்டுச் சென்றான்.

இராவணன் நீராடித் திரும்புவதற்குள் ''இராவணேஸ்வரா'' என்று மூன்று தடவை குரல் கொடுத்தான் சிறுவன். பின் லிங்கத்தை பூமியில் வைத்து விட்டான்.

இராவணன் ஓடி வந்தான். சிறுவன் ஓட ஆரம்பித்தான். முதலில் சிவலிங்கத்தை எடுத்துக்

கொண்ட பின் சிறுவனைத் தண்டிக்கலாம் என்று தீர்மானித்து லிங்கத்தை எடுக்க முயன்றான்.

சிவலிங்கத்தை அசைக்கக் கூட முடிய வில்லை. கயிலை மலையையே அடியோடு பெயர்த்த வனால் இந்த சிவலிங்கத்தை ஒரு சிறிதும் அசைக்க முடியவில்லை. சரி இந்த லிங்கம் இப்படியே இருக் கட்டும் என்று சிறுவனைத் துரத்திச் சென்று தலை யில் ஓங்கிக் குட்டினான். அவர் கணபதி என்று அறிந்து தன்னை மன்னிக்கும்படி பிரார்த்தித்தான். இது முதல்தான் பிள்ளையாருக்காக நாம் குட்டிக் கொள்ளும் பழக்கம் ஏற்பட்டது என்றும் கூறு கிறார்கள்.

இது நடந்த தலம் கோகர்ணம் என்ற புண் ணியசேத்திரம். கோகர்ணம் என்றால் பசுவின் காது. இராவணன் லிங்கத்தை அசைத்து தூக்க முயன்ற போது லிங்கம் பசுவின் காதுபோல நீண்டதாம். இக் கோகர்ணத்தையே மகாபலேஸ்வரம் என்றும் கூறு கிறார்கள். இராவணனுடைய பலத்தையும் சோதித்து அடக்கிய மகா பலம் இந்த சிவலிங்கத்தினிடம் காணப்படுகிறதல்லவா?

தமிழகத்துக்குக் காவரி தந்தவர்

அகஸ்தியர் என்பவர் ஒரு முனிவர். பார்க்க சிறு உருவம். ஆனால் பெரும் சக்தி உள்ளவர். இல்லாவிடில் சிவபெருமான் அவர் திருமணத்திற்கு வந்த பெரும் கூட்டம் காரணமாக இந்த நாட்டின் வடபகுதி தாழ்ந்து தென் பகுதி தூக்கிய போது நாட் டின் நிலையை சமப்படுத்த இவர் ஒருவரை மட்டும் தென் கோடிக்கு அனுப்புவாரா?

இந்த அகஸ்தியர் கையில் கமண்டலத்துடன் குடகு மலை வழியாக வந்து கொண்டிருந்தார். அந்த கமண்டலத்தை ஒரு சிறுவனிடம் கொடுத்து ''கொஞ்ச நேரம் வைத்துக் கொண்டிரு, இதோ வருகிறேன்'' என்று போனார். சிறுவன் அதைக் கீழே வைத்து விட்டு போய்விட்டான். அகஸ்தியர் திரும்பி வரும் போது கமண்டலம் கீழே இருந்தது. பையன் காணப் படவில்லை. அக்கமண்டலத்தை அவர் சமீபிப்பதற் குள் ஒரு காக்கை அதன் மீது உட்கார்ந்து சுத்தமான நீரை அது அசுத்தம் செய்து விடக் கூடாதே என்று அவர் அதை விரட்டினார். காகம் பறந்து விட்டது. போகிற போக்கில் அது கமண்டலத்தைக் கவிழ்த்து விட்டது. அக்கமண்டல நீரே காவிரியாயிற்று. காக்கை யாக வந்தவர் கணபதியேதான். இக்காவிரியால் தான் ''சோழ நாடு சோறுடைத்து'' என்ற பெயர் ஏற்பட்டது.

பாரதம் எழுதிய கணபதி

பாரதத்தை எழுதியவர் வேத வியாசர். சகல வேத சாரத்தையும் ஒரே இடத்தில் வைத்து ஒரு நூல் எழுத இவர் விரும்பினார். ஒன்றே கால் லட்சம் சுலோகங்கள் கொண்டது. இதை எப்படி அமைப்பது என்பதை யோசிக்கவே அவருக்கு மூன்று ஆண்டுகள் ஆயின. தான் சொல்லிக் கொண்டே வர ஒருவர் எழுத வேண்டுமே!

கணபதியைப் பிரார்த்தித்து அவரை எழுதும் படிக் கோரினார். கணபதி ஒப்புக்கொண்டாரே யொழிய ஒரு நிபந்தனை போட்டார். ''ஓயாமல் நடு வில் நிறுத்தாமல் சொல்லிவர வேண்டும். நடுவில் நிறுத்தினால் நான் தொடர்ந்து எழுத மாட்டேன்'' என்றார். வியாசர் ஒப்புக் கொண்டார்.

வியாசர் ஒரு யுக்தி செய்தார். நடு நடுவில் மிகக் கடினமான சுலோகங்களைப் புகுத்தினார். இதற்கு ''கிரந்தி'' என்று பெயர். இக்கடினமான சுலோகங் களுக்குப் பொருள் தெரிந்து விநாயகர் எழுதுவதற் குள் வியாசர் மற்ற சுலோகங்களை நினைவு படுத் திக் கொள்வார்.

இந்த ஒரு நூலைக் கற்றால் போதும், ஹிந்து மதத்திற்கு வேண்டிய சகல நூல்களையும் கற்ற தாகும்.

இதைப் பாரதம் பாடிய வில்லிப்புத்தூரார் தன் நூலுக்குத் துதிப்பாட்டாக அமைத்திருக்கிறார்.

ஔவைக்குக் கைலாசம்

சிவன் கோவில்களில் 63 நாயன்மார்கள் பார்த்திருப்பீர்களே! அவர்களில் ஒருவர் சேரமான் பெருமாள் நாயனார். அவரும் நான்கு சமய குரவர் களில் ஒருவரான சுந்தர மூர்த்தி சுவாமிகளும் கைலாசம் செல்ல விரும்பினர்.

சேரமான் குதிரையில் ஏறிக் கொண்டார். சுந்தரமூர்த்தி வெள்ளை யானையின் மேல் ஏறிப் புறப்பட்டார். ஔவைப் பாட்டிக்கு இந்தச் செய்தி கிடைத்தது. தானும் போக வேண்டும் என்று ஆசைப் பட்டாள். அவளோ வயதானவள். கணபதி பூஜை செய்தாள். ஆனால் கைலாசம் போக வேண்டும் என்ற நினைப்பில் அவசரமாக பூஜித்தாள். பிள்ளையார் கேட் டார் ''ஏன் அவசரம்'' என்று. ஔவை 'அவர்கள் குதிரை மீதும் யானை மீதும் போய்விட்டார்களே: நான் எப் படி போவேன்?'. என்றாள்.

''அவசரமாகப் பூஜை செய்தால் கைலைக்கு போய்விட முடியுமா?''

முடியாதே.

''பின் நிதானமாக பூஜை செய். அவர்களுக்கு முன்னதாக உன்னை கைலையில் சேர்க்கிறேன்''.

ஔவை அமைதியாக கணபதியை பூஜித்தாள். பூஜை முடிந்ததும் ஔவையைத் தன் துதிக்கையால் 'அலாக்'காகத் தூக்கி கைலையில் சேர்த்துவிட்டார் கணபதி. முன்னதாக புறப்பட்ட சேரமானும் சுந்தரமூர்த்தியும் பின்னரே வந்து சேர்ந்தனர்.

''குதிரையும் காதம், கிழவியும் காதம்'' என்ற பாடல் உண்டு. முன்னே புறப்பட்டவர்களுடன் ஔவையும் போய்ச் சேர்ந்தாள் என்பதை இதில் பார்க்கிறோம்.

ஆசிரியர் விநாயகர்

கணபதி ஆசிரியர் பணியையும் செய்திருக்கிறார். சிதம்பரத்திற்கருகே திருநாரையூர் என்று ஒரு தலம் உள்ளது. அந்த தலப் பிள்ளையாருக்குப் பொல்லாப் பிள்ளையார் என்று பெயர். பொல்லாப் பிள்ளையார் உளியினால் செதுக்கப்படாத (பொளியாத) பிள்ளையார் ஆகவே அப்பெயர் ஏற்பட்டது.

திருநாரையூரில் இப்பொல்லாப் பிள்ளையாரை அர்ச்சித்து வந்த சிவாசாரியார் ஒரு வேலையின் பொருட்டு வெளியூர் செல்லவே தன் மகன் நம்பியாண்டானை பூஜை செய்து வரும்படி அவன் தாய் அனுப்புகிறாள்.

பூஜை முடிந்து நிவேதனம் செய்தான் அச்சிறுவன். பிள்ளையார் நிவேதனம் செய்த அன்னத்தை சாப்பிடவில்லை. தன் பூஜையில் தான் ஏதோ தவறு; அதனால்தான் இந்த பிள்ளையார் சாப்பிடவில்லை என்று எண்ணித் தன் தலையை சுவரில் மோதிக்கொள்ள ஆயத்தமானான்.

பிள்ளையார் அச்சிறுவனைத் தடுத்து நிவேதனம் செய்த பொருள்களை உண்டு தானே அவனுக்கு வேத சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்தார்.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவர்கள் மூவரும் பாடிய பாடல்கள் தேவாரம் எனப்படும்.

இவைகள் சுவடிகளில் எழுதப்பட்டு சிதம்பரம் கோவில் அறையில் கிடந்தன. நம்பியாண்டார் நம்பிக்கு அந்தச் சுவடிகள் இருக்கும் இடத்தைக் காட்டி அதை வெளிப்படுத்தியவர் இந்தப் பொல்லாப் பிள்ளையார்தான்.

எத்துநூல் எண்ணாயிரம் பவுன்

ஒரு அரசன் பிரும்மாண்டமான ஆலயம் கட்டுகிறான். அதன் முழு பொறுப்பையும் தன் மந்திரி ஒருவருடைய பொறுப்பில் விடுகிறான். அவர் தெய்வ பக்தர். இவர் கணக்குகளை சரியாக வைக்காமல் அசிரத்தையாக இருந்து விடுகிறார்.

ஒருநாள் அரசன் கட்டி முடித்த கோவிலைப் பார்த்து மிகவும் பாராட்டினான். மந்திரிக்கு ஆள் அனுப்பி கணக்குகளை எடுத்துவரச் சொன்னான்.

கணக்கு வைக்காத மெய்யடியார் தவித்துப் போனார். கோவில் கைங்கரியம் என்றாலும் கணக்கு வைக்காதது தவறுதானே? பூஜை அறையில் விநாயகரைத் தியானித்து மெய்ம்மறந்து இருந்தார்.

சபையில் மந்திரி வருகையை எல்லோரும் எதிர்பார்த்திருந்தனர்.

ஒரு அழகிய இளைஞன் மந்திரி அனுப்பியதாக சொல்லிக் கொண்டு கணக்கு ஏடுகளுடன் அங்கு வந்தான்.

''அடியேன் அமைச்சரது கணக்குப்பிள்ளை; அவர் சொற்படி கணக்குகளைக் கொண்டு வந்திருக்கிறேன். அவர் பல்லக்கில் வந்துகொண்டிருக்கிறார்'' என்றான் அக்கணக்குப் பிள்ளை.

அரசன் அவனை ஏற இறங்கப் பார்த்து விட்டு ''சரி கணக்கைப்படி'' என்றான். மிகவும் வணக்கத்துடன் கூடிய இனிய குரலில் முதலில் சொல்ல வேண்டிய மங்கல வாசகங்கள் சிலவற்றைச் சொல்லி சற்று நிறுத்தி ''எத்து நூல் எண்ணாயிரம் பவுன்'' என்றான்.

அரசன் இதைக் கேட்டதும் திகைத்துப் போனான். செங்கற்கள் அளவாக அமைந்திருக்கிறதா என்று பார்க்க உபயோகிக்கும் சாதா நூலே எத்து நூல், அதுவே எண்ணாயிரம் பவுன் என்றால் ''இந்த கோவில் கட்ட எவ்வளவு ஆகியிருக்கும்? போதும் சுவடியை கட்டலாம்.'' என்றான் அரசன். கணக்குப் பிள்ளையும் சுவடியைக் கட்டினார்.

கணக்குப் பிள்ளை புறப்படவும் மந்திரி வேகமாக உள்ளே வரவும் சரியாக இருந்தது. அரசனுக்குப் புரிந்து விட்டது வந்தது யார் என்று. அவர் சாட்சாத் கணபதி தான்.

நீங்களும் வழிபடலாம்

பிள்ளையாரை மிக எளிமையாக வழிபடலாம். பெரியவர்கள் தான் வழிபட வேண்டும் என்பதில்லை. குழந்தைகள் அவரை வழிபடலாம். அவர் எங்கும் இருப்பார். அவரை பூஜிக்க எருக்கம் பூவும்

அருகம் புல்லும் போதும். இவை எங்கும் கிடைக்கும். இத்தகைய எளியக் கருணைக் கடவுள் விநாயகரைத் தவிர வேறு இல்லை.

இவர் உருவம் இல்லையே என்று கவலைப்பட வேண்டாம். பிடித்துவைத்தால் அது பிள்ளையார். மஞ்சள் பொடியைப் பிடித்து வைத்து வீட்டில் பூஜை செய்வதை நீங்கள் பார்த்திருக்கலாமே.

அயல்நாடுகளிலும் வழிபாடு

நம் நாட்டில் மட்டும்தான் கணபதி வழிபாடு இருக்கிறது என்பதில்லை. அயல் நாடுகளிலும் அவரை வழிபடுகிறார்கள்.

தமிழர்கள் பண்டைக் காலத்திலேயே கப்பலில் பிரயாணம் செய்து கடல் கடந்து சென்று பிற நாடுகளுடன் வியாபாரம் செய்து வந்தனர். அவர்கள் தங்களுடன் தாங்கள் வழிபடும் பிள்ளையாரையும் கொண்டு சென்று பிற நாடுகளில் பிரபலமாக்கியுள்ளனர்.

புத்தர்களும் கணபதியை வழிபட்டதால் அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று புத்த மதத்தை பரப்பியபோது அவர்கள் மூலமாகவும் கணபதி வழிபாடு பிறநாடுகளில் பரவியது.

முக்கியமாக சீனா மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஜாவா, சுமித்திரா, போர்னியோ, பர்மா, மலேசியா ஆகிய நாடுகளில் கணபதி வழிபாடு பரவி வருகிறது.

நேபாளத்தில் பஞ்ச கணேசர் ஆலயம் மிகப் பிரசித்தம். இங்கு ஐந்து கணபதிகள் வழிபடப்படுகின்றனர்.

திபேத்தின் ஆலயங்களில் இரண்டு துவார பாலகர்களில் ஒருவராக கணபதி காணப்படுகிறார்.

பர்மாவில் கணபதிக்கு 'மகா பைனி' என்று பெயர். புத்தகத்தைத் தூக்கும் கடவுளாக இந்த பைனி விளங்குகிறார்.

சயாமில் கணபதிக்கு ஆமை வாகனம்.

கம்போடியாவில் கணபதிக்கு பிரஹ கணேஷ் என்று பெயர்.

சீனாவில், சதுர் முக (நான்கு முக) கணபதி பிரசித்தம்.

ஜாவா கணபதிக்கு தொந்தி வயிறு இல்லை. ஒட்டிய வயிறு, ஜப்பானில் கணபதிக்கு ஷோடென என்று பெயர். சுகம் தரும் கடவுளாக இவர் கருதப்படுகிறார்.

ஒன்றையொன்று தழுவும் இரட்டை விநாயகர் ஜப்பானில் பிரசித்தம்.

ஆப்கானிஸ்தான் ஆலயங்களில் கணபதி நின்ற நிலையில் காட்சி தருகிறார்.

அமெரிக்கா நியூயார்க் பகுதியில் கணபதிக்கு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

மெக்சிகோ நாட்டில் கணபதி அறுவடை காலக் கடவுளாக வழிப்படப்படுகிறார்.

ரோமில் கணபதிக்கு யானை முகமில்லை. ஆனால் இரு மனித முகங்கள். நாம் எப்படி கணபதியை வணங்கிவிட்டுத் தான் மறு காரியம் ஆரம்பிக்கிறோமோ அதுபோல ரோமர்களும் இந்த ஜேனஸ் கடவுளை வணங்கிவிட்டே மறுகாரியம் ஆரம்பிக்கிறார்கள். எப்படி நம் நாட்டில் எல்லா இடங்களிலும் கணபதி இடம் பெற்றிருக்கிறாரோ அது மாதிரி ரோமில் எல்லாப் பட்டி தொட்டிகளிலும் ஜேனஸ் காணப்படுகிறார்.

விநாயக வழிபாட்டின் தத்துவம்

இந்த கணபதி வழிபாட்டின் அர்த்தம் என்ன? விநாயகர் போலவே நாமும் விளங்க வேண்டும் என்பதே.

யானை அறிவிற் சிறந்த பிராணி. யானைகளின் வாழ்க்கையில் சிறந்த கட்டுப்பாடு உண்டு. பல யானைகள் ஒன்று சேர்ந்து ஒரே குடும்பமாக, ஒரு மூத்த யானையின் தலைமையை ஏற்று நடக்கும்.

குடும்பத்துடன் வாழும் நமக்கு யானை நல்ல படிப்பினை.

பெரிய தலை, அபார சிந்தனா சக்தி. அதே போல் குழந்தைகளாகிய நீங்களும் படித்த விஷயங்களையும் கேட்ட விஷயங்களையும் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பெரிய காது - கேட்பதின் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது. கற்றலின் கேட்டலே நன்று என்று சொல்வார்கள்.

சிறிய கண்கள் - வரம் கேட்பவனைக் கூர்ந்து கவனிக்காமல் வரம் அருளும் தன்மை.

பெரிய வயிறு - வயிறு நிறைந்தவர் யாருக்கும் தீங்கிழைக்க மாட்டார் என்று சொல்வதுண்டு.

எதையுமே தவறாக எடுத்துக் கொள்ளாத ஆனந்த நிலையில் இருப்பவர் கணபதி.

அவர் பூஜை மிக எளிது. அதுபோல நமது வாழ்க்கையும் மிக எளிதாக அமைய வேண்டும்.

இத்தகைய கணபதி உங்கள் எல்லோருக்குமே அருள்புரிவாராக.

"பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட"

- *கலைமாமணி* அருளரசு மாசிலாமணி, திருச்செந்தூர்

(அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலில் நடைபெற்ற பன்னிரு திருமுறைக் கருத்தரங்கத்தில் படிக்கப்பட்ட கட்டுரையாகும் இது)

பன்னிரு திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறையைச் சேர்ந்த பாடல் ''பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட'' என்பதாகும். இந்தப் பாடலை அருளியவர் சேந்தனார். பட்டினத்தடிகளின் கணக்கராகப் பணியாற்றியவர் இவர். ஓர் நாள் பட்டினத்தார் சேந்தனாரிடம் ''சிறைப்பட்டிருக்கும் செல்வம் எங்கிருந்தாலும் மனதைக் கவரும். அந்தச் செல்வம் நம்முடையதே என்ற செருக்கு ஏற்படும். அதனால் சமுதாயத்துக்கு கேடு. செல்வம் ஒரே இடத்தில் சிறைப்பட்டிருந்தால் அதைச் சிறைப் படுத்தியவனுக்கும் அதனால் துன்பம் ஏற்படும். அத்துடன் சமுதாயத்திற்கும் அதனால் துன்பம் ஏற்படும். எனவே, இச்செல்வத்தை எடுத்து அவர் இவர் என்ற வேறுபா டின்றி, வாரி இறைத்துவிடு'' என்றார்.

குருநாதரின் உபதேசப்படி சேந்தனார் பட்டினத்தாருடைய செல்வத்தையும் நவநிதியங்களையும் வீதியிலே வாரிவாரி இறைத்தார். இச்செயலை அறிந்து மன்னன் வந்தார். ''ஏய் நிறுத்து, என்ன காரியம் செய்கிறாய்'' எனக் கடிந்தார். சேந்தனார் ''இது என் குருநாதர்கட்டளை'' என்றார். உலக நினைவே இல்லாத பட்டினத்தார் சொன்னால் நீ எப்படி இந்த காரியத்தை செய்ய லாம் என்று சேந்தனாரைச் சிறையில் அடைத்தார் மன்னன். அந்தக் காலத்தில் செல்வம் சிறைப்பட்டிருக்கக் கூடாது என்ற ஒரே காரணத்துக்காக செல்வத்தைப் பலரும் பயனடைய வேண்டும் என்ற எண்ணத்தில் பட்டினத்தார் சேந்தனார் மூலம் இந்தக் காரியத்தை செய்தார்.

செல்வம் சுழன்றுகொண்டே இருக்க வேண்டும், ஒரே நிலையில் தேங்கி இருக்கக் கூடாது என்ற தத்துவத்தை இது நமக்கு உணர்த்துகிறது. பட்டினத்தாரின் அருள்நோக்கால் சிறைக்கதவும் தானே திறந்தது. சேந்தனாரும் வெளியே வந்தார். இனியும் இங்கு இருக்கக் கூடாது என்ற எண்ணத்தோடு மனைவி குழந்தைகளோடு தில்லைக்குச் சென்றார். சிவகங்கையில் புனித நீராடினார். தில்லைநாதனை வணங்கினார். ஒரு குடிசையில் குடியிருந்து கொண்டு நாள்தோறும் விறகு வெட்டி வாழ்ந்து வந்தார்.

திருமங்கையாழ்வார் தேகத்தை நிழலில் வைத்து ஆத்மாவை வெயிலில் காய வைக்கிறோம் என அருளினார். ஆனால் சேந்தனாரோ, ஆத்மாவை சிவனிடம் வைத்து தேகத்தை வெயிலில் காயவைக்கக்கூடிய விறகு வெட்டியாக வேலை செய்தார். அதன்மூலம் வரும் வருவாயில் தனது குடும்பத்தைக் காப்பாற்றினார். இத்தகைய ஏழ்மை நிலையிலும் அடியார்க்கு அன்னதானம் செய்து உண்பது அவருடைய இலட்சியம். ஒருசமயம் விடாது ஆறு நாட்கள் அடை மழை பெய்தது. வெளியே யாரும் செல்ல முடியவில்லை. பசியின் கொடுமையால் குடும்பமே துன்பப்பட்டது. பசியின் துன்பம் பொறுக்காது கொட்டுகின்ற அடை மழையிலும் வீசுகின்ற பேய்க்காற்றிலும் சென்று விறகு வெட்டிக் கொண்டிருந்தார். ஈர விறகாயிருந்த காரணத்தினால் யாரும் அதை வாங்கவில்லை. பசியின் கொடுமைக்காக குறைந்த விலைக்கு விற்று கேழ்வரகு வாங்கி கூழ் சமைத்தார். அடியார்க்கு அமுது படைக்க, விடாது பெய்யும் அடை மழையிலும் அடியாரைத் தேடிச் சென்றார். திருவிளையாடல் புராணத்தில் விறகு வெட்டியாக வந்த சிவபெருமான் பசியின் மயக்கத்தால் படுத்திருப்பதைப் போல் ஒரு மண்டபத்தில் படுத்திருந்தார். அந்த அடியவரை அழைத்து வந்து கூழ் வார்த்தார். அடியவர் உண்டு மகிழ்ந்தார். மிக மிக அமுதமாக இருக்கிறது, என மேலும் மேலும் வாங்கிச் சாப்பிட்டார். மீதம் இருந்தால் கொடுங்கள் மற்றவர்களுக்கும் கொடுக்கலாம் என்று வாங்கிச்சென்றார். மறுநாள் பொழுது விடிந்தது.

எல்லா அர்ச்சகர்களும் சிதம்பரம் நடராஜர் சன்னதியை அடைகிறார்கள். நடராஜர் மேனி முழுவதும், மண்டபம் முழுவதும் கூழாகச் சிந்திக் கிடக்கிறது. அந்தணர்கள் அதிசயித்தார்கள்; இதை யார் செய்தது? என்று ஆய்வு செய்தார்கள். அதே இரவில் சோழ மன்னனுக்கு அர்த்த சாம மணியோசை கேட்கவேயில்லை. சோழமன்னன் என்ன காரணம் என்று கவலைப்பட்டு கண்ணீர் சிந்தினார். இரவு மணி இரண்டு கண கண என்று மணி ஒலித்தது. அரகர சிவ சிவ என்று மன்னன் துள்ளி எழுந்தான். வானொலி மூலம் நடராஜர் பெருமான் ''என் அன்பர் சேந்தன் நியதியோடு என்னை அழைத்து எனக்குக் கூழ் அமுது

நிவேதித்தான். அவன் இல்லம் சென்று அன்போடு ஏற்றோம். எனவேதான் உனக்கு மணி யோசை கேட்கத் தடைபட்டது'' என்று கூறினார் இறைவன்.

சேந்தனாரா அவர் எங்கே? அவர் இருக்கு மிடம் தெரியவில்லையே! என்று சோழ மன்னன் வருத்தப்பட்டான். அன்று காலை திருவாதிரை திரு நாள். மன்னன் தில்லைக்கு வருகிறார். அந்தணர்கள் யாவரும் நடராஜர் மேனி முழுவதும் கூழ் சிந்திக் கிடந்த காட்சியினை விவரித்தார்கள். மன்னன் இந்த செய்தி இரவே தெரியும் என்று சொன்னான். இதி லிருந்து இறைவன் எளியவருக்கு எளியவர், உயர்ந் தோர் தாழ்ந்தோர் என்ற பேதம் அவருக்கு கிடையாது என உணரலாம். அரசனுடைய அரண்மனையை விட விறகு வெட்டியாக இருக்கக்கூடிய சேந்தனார் குடிசைக்கே உகந்து சென்றான் இறைவன். அவன் கொடுத்த கூழை அமுதமாக உண் டான். இதனால் இறைவனுடைய எளி வந்த தன்மை தெளிவாகத் தெரிகிறது அதனால்தான் இன்றும் நாம் திருவாதிரை தோறும் சேந்தனார் நினை வாக இறைவனுக்கு களியமுது படைக்கிறோம். இந்த திருவாதிரை திருநாளில் நடராஜபெருமானைத் தேர்மீது ஏற்றுவார்கள். பல்லாயிரக் கணக்கான மக்கள் சூழ மன்னன் உட்பட தேர்வடம் பிடித்து இழுப்பார்கள். அன்றும் அதே போல் இழுத்தார்கள். தேர் நகரவே யில்லை. எவ்வளவோ முயற் சித்தும் தேர் ஒரு அங்குலம் கூட நகர்ந்தபாடில்லை. தேர் நிலை வந்து சேர்ந்த பின்பு தான் உணவு உண்பது வழக்கமாக வைத்திருந்தார் மன்னர். அந்தணர்கள் வேதம் ஓதினார்கள். திருமுறை வாணர்கள் திருமுறை பாடினார்கள். பக்தர்கள் அரகர சிவ சிவ என்று தேர் வடம்பிடித்து இழுத்தார்கள். தேர் அசையவில்லை. இந்த நேரத்தில் வானொலி மூலம் ''சேந்தா! என் அன்பனே! நீ என் மேல் பல்லாண்டு பாடு, தேர் ஓடும் என்ற குரல் ஒலித்தது. சேந்தனார் எங்கே என்று மன்னர் உட்பட மக்கள் அத்தனை பேரும் தேட ஆரம்பித்தனர். சேந்தனாரோ ''சேவிக்க வந்த எனக்கு இப்படி ஒரு பெரும்பேறா? இத்தனை இலட்சம் மக்க ளுக்கு முன் கட்டளையிடுகிறானே! எம்பெருமானே! உன் திருவுளத்தை என் சொல்லி பாடுவேன்'' என்று திருத்தேர் அண்மையில் வந்து இருகரத்தையும் உச்சி மேல் குவித்து ''நாய்க்கும் ஓர் தவிசிட்டதுபோல எளிய என்னை பாடும்பணியில் ஈடுபடுத்திய அரசே பாடவா அடியேன்? என் சொல்லி பாடுவேன்? என்றவர் ''மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்'' எனப் பாட ஆரம்பித்தார். இவ்வாறு ஒவ்வொரு வீதிக்கும் மூன்று பாடல்கள் வீதம் பல்லாண்டு பாடிக்கொண்டே வந்தார். தேர் நகர்ந்து வந்தது. எட்டாவது பாடலாக,

''பாலுக்கு பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல்
ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே
இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு
கூறுதுமே.''

என்று பாடினார் சேந்தனார்.

இதேபோன்று வைஷ்ணவத்திலும் திருமாலுக்குப் பெரியாழ்வார் பல்லாண்டு பாடியுள்ளமை நோக்கத் தக்கது. பாலுக்கு பாலகன் வேண்டி அழுத பாடலை நாம் சிந்திக்க வேண்டும். ஞானசம்பந்தர் சீர்காழியம் பதியில் அழுதார். அம்பிகை ஞானப்பால் கொடுத்தார். மாணிக்கவாசகர் ''அழுதால் உன்னை பெறலாமே'' என்றார். வேண்டத்தக்கதறிந்து வேண்டமுழுதும் தரு வோன் நீ என்றார் மாணிக்கவாசகர். தட்டுங்கள் திறக்கப் படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்றார் ஏசுபிரான். இறைவனிடம் கையேந்துங்கள் அவன் இல்லையென்று சொல்வதில்லை என்றார் நபிகள் நாயகம்.

வியாக்கிரபாத முனிவர் மகன் உபமன்யு; சிறுவயதிலே வசிஷ்டர் இல்லத்திலேயே வளர்ந்தவர். காமதேனு பசுவின் பாலை அருந்தி வளர்ந்தவர். தந்தையார் வீட்டுக்கு வந்ததும், உபமன்யுக்கு பசிவர பால்கேட்டு அழுதார். வியாக்கிர பாத முனிவர் ''நீ சிவபெருமானை நோக்கி தவம் செய்வாயாக'' என்றார். தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை என்பதை உணர்ந்து சிவபெருமானை நோக்கி தவம் செய்தார். அவரது தவத்தின் சிறப்பை உணர்ந்து, சிவபெருமான் பாற் கடலை உடனே கூவி அழைத்து உபமன்யு முனிவருக்கு அளித்தார்.

திருமால் ததீசி முனிவரிடம் போரிட்டு சக்கரா யுத படையை இழந்தார். சலந்திர சூரனை அழிக்க சக்கரப்படை தேவை, இதற்காக திருவீழி மிழலையில் திருமால் நாள்தோறும் ஆயிரம் தாமரை மலர்களோடு சிவபெருமானை அர்ச்சித்தார். ஓர்நாள் சிவபெருமான் ஒரு தாமரை மலரை மறைத்துவிட்டார். பூஜை செய்யும் போது திருமால் ஒரு தாமரை மலர் குறைவதைக் கண்டு வருந்தினார். பூஜையை நிறைவுசெய்ய தாமரை மலர்போன்ற தன் செந்தாமரைக் கண்ணை பெயர்த்து பூஜையை நிறைவு செய்தார். இந்த அரிய பக்தியைக் கண்ட சிவபெருமான் திருமாலின் பக்தி உணர்வை வியந்துபோற்றி கண்ணையும் சக்ராயுதத்தையும் கொடுத்து அருளினார். தில்லையென்பது ஊழி ஊழி காலத்திலும் அழியாத தன்மையுடையது. அந்தத் தில்லை யில் வானணுக்கள் மீனணுக்கள் ஊன் அணுக்கள் உயிர் அணுக்கள், அனைத்தும் நான் நான் என்று அந்த ரத்திலேயிருந்து ஆடுகின்றன. அவைகளுக்குப்பின் தான் தான் என்ற தனி நாதமுழங்க அசைகின்றது ஒரு மெய்ப்பொருள். அப்பொருளே தில்லையில் ஆடும் கூத்தப் பெருமான்.

சேலம் அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில் அலுவலக கட்டிடத் திறப்பு விழா மற்றும் கோயில் பிரகார தள வரிசை திறப்பு விழாவில், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். சேலம் இணை ஆணையாளர் திரு இ. தேனைய்யா, எம்.ஏ பி.எல்., திருக்கோயில் நிர்வாக அதிகாரி திரு சா. இராமசாமி, திருக்கோயில் அறங்காவலர்கள் மற்றும் சேலம் மாவட்ட அறங்காவலர் நியமனக் குழுத் தலைவர் திரு தி. பூபாலன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

சர்வசங்கார காலத்தில் எல்லாம் ஒடுங்குதலின் எங்கும் ஒரே இருள்மயமாக இருக்கும். அப்போது இறைவன் எல்லா உயிர்களுக்கும் ஒய்வை அளித்து விட்டோம் என்று மகிழ்ந்து ஊழிக்கூத்தை இயற்று கின்றான். ஆதலின் நட்டம் பயின்றாடும் நாதனே என்றார் சுந்தரர். தில்லைக்குச் சென்றபோது தாம் கண்ட ஆனந்தக் கூத்தினைத் தனிப்பெரும்கூத்து என்று போற்று கிறார். ஐம்பொறிகளிலும் சிவஞானம் கைகூடும்போது வழிபட வருவதே தில்லைக்கூத்து. ஆனந்த நடனம் ஒரு அனுபவக்கூத்து. ஊன நடனம் சகலர்க்காக நடத்தப் பெறுவது. ஞான நடனம் பக்தர்களுக்காக நடத்தப் பெறுவது. ஆனந்த நடனம் சீவன் முக்தர்க்காக நடத்தப் பெறுவது. தில்லை ஊழி ஊழி காலத்திலும் அழியாத தன்மையுடையது. அந்தத் தில்லையில் அந்தணர்கள் வேதம் ஓதி ஓதி ஆரவாரமாக செய்யும் ஓசை எங்கும் முழங்கும். அந்தத் திருச்சிற்றம்பலத்தையே இடமாக கொண்டு அன்பர்க்கு அருள்புரிந்து ஆடும் ஆனந்த தாண்டவம் புரியும் நடராஜபெருமானை சேந்தனார் நட்டம்பயில வல்லானுக்கு பல்லாண்டு பல்லாண்டு என்று பாடி வாழ்த்துகின்றார். இதையே நாவுக்கரசர்

''பாலனுக்காய் அன்று பாற்கடல் ஈந்து பணைத்
தெழுந்த
ஆலினிற்கீழிருந்து ஆரணம் ஓதி அருமுனிக்காய்ச்
சூலமும் பாசமும் கொண்டு தொடர்ந்து அடர்ந்தோடி
வந்த
காலனைக் காய்ந்தபிரான் கடவூர் உறை உத்தமனே''

- திருநாவுக்கரசர்

எனவும்,

''ஆவின்பால் கண்டளவில் அருந்த அப்
பாலன் வேண்டலும் செல்லென்று பாற்கடல்
கூவினான், குளிரும், பொழிற் கோளிலி
மேவினானை தொழவினை வீடுமே''

- திருநாவுக்கரசர்

எனவும் பாடியிருக்கக் காண்கின்றோம்.

''பங்கயம் ஆயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தம் கண் இடந்து அரன் சேவடிமேல் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரம்மாற்க்கு அருளியவாறு
எங்கும் பரவினான் தோள் நோக்கம் ஆடாமோ''

எவ்று பாடியுள்ளார் மாணிக்கவாசகர்.

சேந்தனார் இறைவனுக்கு மொத்தம் பன்னிரெண்டு பல்லாண்டுப் பாடல்கள் பாடியுள்ளார். இந்தப் பாடல்கள் அனைத்தும் இறையருளை நாம் பெறுவதற்கு ஒரு வழிகாட்டியாக அமைந்திருக்கின்றன. தில்லை யென்பது ஊர் பெயர். கோயில் என்பது சிதம்பரம், சிதம்பரத்தின் மேல் கூரையில் வேய்ந்த ஓடுகள் 21600, நாம் ஒரு நாளைக்கு விடும் மூச்சுக் காற்றின் எண்ணிக்கை 21600. இதைப் போன்ற தத்துவங்கள் அனைத்தையும், தில்லையில் நட்டம் பயின்றாடும் நாதனுடைய திருக்கூத்தையும் இன்றைய அறிவியல் உலகம் ஆய்வு செய்து வருகிறது. நம்முடைய சமயக் கருத்துக்கள் அனைத்தும், இன்றைய அறிவியல் உலகத்தால் ஏற்றுக்கொள்ளத்தக்கனவாய் உள்ளன என்பதை நாம் உணரவேண்டும்.

★★★

அருள்மிகு ஈச்சனாரி விநாயகர் திருக்கோயில்

- பைம்பொழில் கே. பாலசுப்பிரமணியன், M.A., M.Phil, B.Ed.,

முன்னுரை

வேத முதல்வர். உலகில் முழுமுதற் கடவுளாகப் போற்றப்படுபவர் விநாயகர்; விக்கினங்களைக் களைபவர். ஞானப் பழம் ஆனவர்; வக்கிர துண்டன் என்றெல்லாம் பக்தர்களால் போற்றப்படுவர். தமிழகம் மட்டுமல்லாது உலகின் பலபகுதிகளிலும் எழுந்தருளி அருள் பாலித்து வருகிறார். கோவை மாநகரின் அருகில் ஈச்சனாரி விநாயகர் என்னும் திருநாமத்தோடு மிகப் பெரிய உருவத்தோடு எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார்.

இருப்பிடம்

கோவை - பொள்ளாச்சி நெடுஞ்சாலையில் கோவையிலிருந்து சுமார் 15 கிலோமீட்டர் தொலைவில் அமைநதுள்ளது இத்தலம்.

பழங்காலத்தில் ஈச்சம்புதர்கள் அதிகமாக இந்த இடத்தில் காணப்பட்டதால் இவ்வூருக்கு ஈச்சனாரி என்று பெயர் வந்ததாகக் கூறுவர்.

ஆலயம் தோன்றிய வரலாறு

''மேற்குச் சிதம்பரம்'' எனப் போற்றப்படும் பேரூர் பட்டீஸ்வரர் திருக்கோவிலில் பிரதிஷ்டை செய்வதற்காக 5 அடி உயரமும், 3 அடி பருமானும் கொண்ட விநாயகர் விக்கிரகத்தை மதுரையில் இருந்து வண்டியில் ஏற்றிக் கொண்டு கோவை செல்லும் வழியில் ஈச்சனாரி என்னும் இவ்வூர் அருகில் வரும்போது வண்டியின் அச்சுமுறிந்து விடவே, இவ்விடத்தில் விநாயகர் விரும்பி அமர்ந்துவிட்டார். விநாயகரை மீண்டும் பேரூர் எடுத்துச் செல்ல முயன்ற போது இவ்விடத்திலிருந்து விக்கிரகம் அசைக்கமுடியாமல் இருந்து விட்டதாகக் கூறுவர். விநாயகர் விருப்பத்தோடு அமர்ந்த தலம் ஈச்சனாரி ஆதலால், பக்தர்கள் விரும்பும் வரங்கள் எளிதில் இவ்வாலயத்தில் கிடைக்கின்றன.

ஆலய அமைப்பு

இத்திருக் கோயில் கோயம்புத்தூர் - பொள்ளாச்சி பிரதான சாலையின் மேல்புறம் கிழக்கு நோக்கி அழகிய இராஜகோபுரத்துடன் அமைந்துள்ளது. கோபுர வாயிலில் நுழைந்தவுடன் உட்பிரகாரம் அமைந்துள்ளது. அதனை வலமாக வந்து ஆலயத்திற்கு நுழைய அர்த்த மண்டபம், கர்ப்பக்கிரகம் அமைந்துள்ளன. கர்ப்பக்கிரகத்தில் விநாயகப் பெருமான் பக்தர்கள் குறை தீர்க்கும் குணநிதியாக, அருள் நிதியாக எழுந்தருளியுள்ள காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். மிகப் பெரிய அறுகம்புல் மாலை அணிவிக்கப்பட்டு கம்பீரமாக எழுந்தருளியுள்ள காட்சி அருமையானது. விநாயகப் பெருமானை வணங்கி வழிபட்டு வெளிவர, வெளிப்பிரகாரம் அமைந்துள்ளது. ஆலயத்திற்கு வடபுறம் ''அலங்கார மண்டபம்'' மிகப்பெரிய அளவில், காற்றோட்டமான வசதியுடன் கட்டப்பெற்றுள்ளது. திருமணங்கள் இவ்வாலயத்தில் இம்மண்டபத்தில் வைத்துத் தான் நிகழ்த்தப் படும்.

சமுதாயப் பணி

17.11.1985ல் 101 மணமக்களுக்கு இலவசத் திருமணமும் 7.12.86ல் 108 மணமக்களுக்கும் (பொருளாதாரத்தில் நலிவடைந்தவர்களுக்கு) இலவசத் திருமணம் மிகவும் சிறப்பாக நடத்தி வைக்கப் பட்டன.

கஜபூஜை

கோவை மாநகரில் 1988-ல் நகரமே குலுங்கும் வண்ணம் 108 கஜபூஜை முடிந்தவுடன் 11 யானைகளில் பூஜை, வேள்வி புனித தீர்த்தம் ஊர்வலமாக எடுத்து வரப்பெற்று, இத்திருக்கோவிலில் அபிஷேக, ஆராதனை நடை பெற்றது.

இத்திருக்கோயிலின் தனிச் சிறப்பு

அஸ்வனி முதல் ரேவதி வரையிலான 27 நட்சத்திரங்களுக்கும் ஒவ்வொரு அலங்காரம் செய்யும் ''நட்சத்திர அலங்கார பூஜை'' இவ்வாலயத்தில் நடக்கும் ஒரு சிறப்பு பூஜை ஆகும். இந் நட்சத்திர பூஜையும், இத்திருக்கோவில் நித்திய பூஜைக்கு வேண்டிய பால், பன்னீர், சந்தனம், குங்குமம், மலர் மற்றும் மின்கட்டணம் போன்ற யாவும் கட்டளை தாரர்களைக் கொண்டே ஆண்டுமுழுவதும் நடைபெற்று வருவது இவ்வாலயத்தின் தனிச் சிறப்பாகும்.



இத்திருக்கோவிலில் அதிகாலை 5 மணிக்கே நடை திறக்கப்படுகிறது, இரவு 10 மணிவரை இடை விடாது பக்தர்கள் தரிசனத்திற்காக நடை திறந்திருக் கும். மதிய வேளையில் உச்சிக்கால பூஜை முடிந்து நடை சாத்துவது இல்லை.

மேலும் இத்திருக்கோவில் விநாயகர் பெருமா னுக்கு நெய் விளக்குத் தீபாராதனை மட்டுமே செய்யப் படுகிறது. இவ்வாறு செய்வதால் கர்ப்பக்கிரகத்தில் எளிதில் கரிப்பிடித்து கறுப்பாகாமல், எப்போதும் பளபளப்பான சுவர்களாகக் காட்சி அளிக்கிறது.

இத்திருக்கோயில் நிர்வாகத்தின் மூலம் விநாயகர் பூஜைக்கு வேண்டிய அனைத்துப் பூசை சாமான்களும் குறைந்த விலையில் விற்கப்பெறுவ தால், பக்தர்கள், கோவிலிலேயே பூஜைப் பொருட் களை வாங்கி, பூஜை செய்து செல்ல வசதியாய் உள்ளது. வெகுதொலைவான ஊர்களிலிருந்து வரும் பக்தர்கள் பூஜைக்குரிய பொருட்களை சிரமப்பட்டு சுமந்து வரவேண்டிய அவசியமில்லை.

இத்திருக்கோவிலில் விநாயகப் பெருமானை தங்கத் தேரில் அமரவைத்து பவனி வர ஏற்பாடு செய்யப்பெற்றுள்ளது. பக்தர்கள் அதற்கான கட்டணத் தொகையைச் செலுத்தி கணேச பகவானை தேரில் உலாவரச் செய்து கண்ணாரக் கூண்டு, களி பேருலகை அடையலாம்.

நிர்வாகம்

இத்திருக்கோயில் தமிழக இந்துசமய அற நிலைய ஆட்சித் துறையினரால் நிர்வகிக்கப் பெற்று இன்று முதல் நிலை நிர்வாக அதிகாரி ஒரு வர் அரசாங்கத்தால் நியமிக்கப்பெற்றுள்ளார். தற்சம யம் அறங்காவலர்கள் அரசால் நியமிக்கப் பெற்றுள் ளனர்.

4.6.1990ல் மகா கும்பாபிஷேகமும், மற்றும் பொருளாதாரத்தில் நலிந்த 108 மணமக்களுக்கு இல வசத் திருமணமும் நடை பெற்றது.

பூஜைகள், விழாக்கள்

உசத்காலம், காலசந்தி, உச்சிக்காலம், சாய ரட்சை, இரண்டாம் காலம், அர்த்த ஜாமம் என ஆறுகாலப் பூஜைகள் தினசரி இவ்வாலயத்தில் நடைபெற்று வருகின்றன. ஆண்டுதோறும் தமிழ் வருடப் பிறப்பு, விநாயகசதுர்த்தி போன்றவை ஏக தின உற்சவமாக நடைபெறுகின்றன.

நிறைவுரை

பொள்ளாச்சியிலிருந்து சுமார் 30 கி.மீட்டர் தூரத்தில் உள்ள இவ்வாலயத்தின் முன் கோவை செல் லும் அனைத்து வாகனங்களும் நின்று, வழிபட்டுச் செல்வது வழக்கம். கவலைகள் போக்கும் கணேசப் பெருமான், பக்தர்களுக்கு மன நிறைவைத்தரும் வண்ணம் அருள்பாலித்து வருகிறார்.

சிவபெருமான் திருவருளும் கோளறு திருப்பதிகமும்

- மயிலை சிவஞானஜோதி சிவசக்தி அம்மையார்

ஓம்! ஓம்! ஓம்!
அருட்பெருஞ் ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!
தனிப் பெருங் கருணை! அருட் பெருஞ்ஜோதி!

நீலாஞ்சன சமாபாஸம்! ரவிபுத்ரம்யமாக்ரஜம்!!
சாயா மார்த்தாண்ட ஸம்பூதம் / தம்நமாமி
சனைஸ்ரம்!!

ஸ்ரீ சனிபகவான் நளனுக்கும் மற்றவர்களுக்கும் காட்சி தந்து அருள் புரிந்த இடம் திருநள்ளாறு. மற்றும் குச்சனூர் ஆகும். மதுரைக்கு அருகில் உள்ள திருவாதவூர், சிறந்த சிவஸ்தலம் மட்டும் அல்ல. சிறந்த சனிஸ்தலமும் ஆகும். திருவாசகத்தை அருளிய திரு மாணிக்க வாசகர் பிறந்து வாழ்ந்த திருத்தலம் திரு வாதவூர் ஆகும். சனி பகவான் தனக்கு உண்டான வாதநோயை குணப்படுத்திக் கொள்வதற்கு, சிவபெரு மானை நோக்கித் தவமிருந்த ஸ்தலம் திருவாதவூராகும். எனவே சனிபகவானால், தோஷம் பிடித்தவர் களும், வாத நோய் வந்தவர்களும் திருவாதவூர் சென்று, சிவபெருமானை தரிசித்து வணங்கி ஸ்ரீ சனிபகவானை யும் வணங்கினால், பிணி நீங்கி விடும் என்பது ஐதீகம்.

சிவபெருமான் கோயில்களில் நவகிரஹ சன்னிதி உண்டு. ஆனால், பெருமாள் கோயிலில் அனேகமாக, நவகிரக சன்னிதி கிடையாது. ஆனால், மதுரையை அடுத்த கூடலழகர் கோயிலில் தான் முதன் முதலில் நவகிரஹ சன்னிதி அமைக்கப்பட்டது. திருமோகூர் ஆலயத்திலும் நவகிரஹ சன்னிதி இருக்கிறது. நவகிரகங்களைப் பற்றிய கருத்து உள்ளடக்கமாக சில வைணவ நூல்களிலும் உள்ளது. வேதாந்த தேசிகர், நவகிரகங்களின் சீரும் சிறப்பும் பெருமாளின் பாதுகைக்கு அணி செய்வதாக, எனப் பாதுகா ஸ்லோகத்தில் பாடுகிறார்.

''கனக ருசிரா ! காவ்யாக் யாதா ! சனைஸ்
சரணோஜிதா!!
ச்ருத குரு புதா! பாஸ்வத்ருபா! த்விஜாதிப
ஸேவிதா!!
விஹித விபவா தித்யம்! விஷ்ணோ:
பதே மணிபாதுகே!!''
த்வமஸி மஹதி! விஸ்வேஷாம்! ந:
சுபாகிரஹ மண்டலி!!

என்று வேதாந்த தேசிகர் பாடியுள்ளார்.

நம்மாழ்வார் பாடிய ''திருவாய் மொழி நூலிலும் 'அங்கண மலர்த்தாள்' எனத் தொடங்கும், பாடலில், ஒன்பது கிரகங்களும் இடம் பெறுகின்றன.

நவகிரகங்களுக்கு நன்மை தந்த திருத்தலம் திருமங்கலங்குடி என்ற சிவஸ்தலம். இத்தலம் கும்பகோணத்துக்கருகில் உள்ளது. இங்குள்ள சிவ பெருமானின் பெயர் பிராணநாதர். சிவனின் சக்தி, மாங்கல்யம் தந்த மங்களாம்பிகை ஆவாள். நவகிரகங்களின் பலனை வேண்டி, கோயிலில் நவகிரகங்களைச் சுற்றி வந்து, நவகிரக நாயகியாம் தாயைவணங்குகின்றோம். நவகிரகங்களின் நாயகியே தாய் சிவசக்தி எனில், நன்மை செய்யும் நவகிரகங்களே நம் தந்தை சிவனல்லவா.

நவகிரகங்கள் என்றால் பயப்படத் தேவையில்லை. சனி திசை கஷ்டமிருந்தால், எட்டு வெற்றிலை எட்டு பாக்குடன், வெற்றிலையை ஒன்றன் மீது ஒன்றாக, பாக்குடன் எள்ளும் வைத்து, சனிக்கிழமையில் தலைக்கு அடியினில் வைத்து தூங்கி, காலை எழுந்தவுடன், பொங்கிய சாதத்துடன் அதைக் கலந்து காக்கைக்கு வைத்து வந்தால் சனிக் கஷ்டங்கள் விலகும் என்பார்கள். எள்ளைத் துணியில் மூட்டையாகக் கட்டி எண்ணெய்யில் ஊறவைத்து, சனிபகவான் சன்னிதி முன்பு கோயிலில் ஏத்தலாம். சனிக்கிழமை விரதம் இருக்கலாம் என்பர். ஆஞ்சனேயருக்கு சனிக்கிழமையில் வடமாலை சார்த்தலாம் என்றும் கூறுவார்கள். சனிபகவானுக்கு எள்ளுசாதம் நிவேதனம் செய்வர். கருப்புக்கயிறு கையில் அல்லது இடுப்பில் கட்டுவர். இதனால் சனி பகவானால் வரும் தோஷங்கள் நீங்கும் என்பார்கள்.

சனிபகவானே, தனக்கு வந்த வாதநோய் நீங்க சிவ பெருமானை தவம் செய்து, தியானம் செய்து, அவரது வாத நோய் நீங்கிக்கொண்டார் அல்லவா. அதனால், சனி பகவான் வணங்கிய சிவ பெருமானை வணங்கி, சிவன் நாமம் சதா நேரமும் சொல்லி, சிவ பெருமானை, மறவாதிருப்பவர்க்கு இவை யாவுமே தேவை இல்லை. சிவபெருமானை மறவாமல் இருந்தால் போதும். கயிலை நாதனை மறவாமை வேண்டும்.

ராகம் :- தாளம்

பல்லவி

நாதன் நாமம் உரைக்கையிலே - கயிலை
நாதன் நம்முள்ளே வசிக்கையிலே

அநுபல்லவி

நாளும் இன்பம் பெருகிடும் !
திருவடி இன்பம் நிலைத்திடும் (நாதன்)

சரணம் -1

நாள் என் செய்யும் கோள் என் செய்யும்
நாடிய வினைதான் என் செய்யும் - கொடுங்
கூற்றுவனும் தான் என் செய்வான்
நாளும் நன்மை செய்யும் கோளும் நன்மை
செய்யும்
நாடிய வினைகளும் ஓடிடுமே - கொடுங்
கூற்றுவனும் அஞ்சி ஓடிடுவான் (நாதன்)

சரணம் - 2

இதயத்தில் இறைவன் வசிக்கையிலே
ஜீவ சிவ ஐக்கியம் தந்திடுவான்
உதய ஆத்மனாய் எழுந்திடுவான்
ஞானக் கண்ணிலே ஞான ஜோதியாகி
ஞான குருவாக வந்திடுவான் - ஞான
ஜோதியில் சிவனைக் காட்டிடுவான் (நாதன்)

சரணம் - 3

பித்தன் சிவக் காட்சியினால் பித்தனாகி
அருகினில் சென்றிட துடித்திடுவாய் - நீ
அடைக்கலம் கொடு என்று வேண்டிடுவாய்
கண்ணைப் பறிக்கும் வண்ணம்
விண்ணின் ஜோதி இறங்கிவந்து
ஆத்மனை அணைத்து மகிழ்ந்திடுமே - ஜோதி
தாண்டவம் சிரசினில் ஆடிடுமே! (நாதன்)

நமது உடலில் ஒன்பது வாசல்கள். ஒன்பது நவகிரகங்களும் இந்த ஒன்பது வாசலையும் இயக்கு கின்றது. சூரியன் இடது கண் வாசல், சுக்கிரன் வலது கண்வாசல், சந்திரன் வாய் வாசல், சனி இடது காதுவாசல், வியாழன் வலது காது வாசல், புதன் இடது நாசிவாசல், செவ்வாய் வலது நாசி வாசல், இராகு மலவாசல், கேது சிறுநீர் வாசல், தொப்புள் அறுத்து அடைத்த வாசல். இப்படி நமது உடலின் ஒன்பது வாசல்களும் அழுக்கடைந்த வாசல். நாபிக்கமலம் சுத்தமான வாசல். இதைத்தான், நம் கவிஞர் கண்ண தாசன் அவர்கள் இது ''ஓட்டை வீடு ஒன்பது வாசல் இதற்குள்ளே ஆசை என்ன?'' என்று பாடியுள்ளார்.

ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்னும் வாரத்தின் ஏழு நாட்களும் நல்ல நாட்களே. (1) ஞான ஒளியைத் தரும் ஞாயிறே சூரியன் (2) மங்காத மாசில்லா மனதைத் தரும் திங்களே சந்திரன். (3) செம்மையாம் வாயின் பேச்சே செவ்வாயின் இன் சொல். (4) ஏழுகலைகளையும் வளர்க்கும் புதனே வித்தைக்கு அதிகாரி (5) வியாழனே குருவாக போதிக் கும் குருவாரமாம் குரு. (6) சுக்ரதசைக்கு நம்மை சுபமாக அழைத்துச் செல்லும் வெள்ளியே சுக்கிரன். ஆறுநாட் களிலும் அன்புடன் ஆத்மதிருப்தியுடன், அயரா உழைப் புடன், ஆண்டவன் நினைப்புடன் பலனைப் பாராது செயல்பட்டு கடமையை செய்தால் நிலையான இன்பம் அளிப்பவன் சனீஸ்வரன். ஸ்திரமான இன்பம் பெறு வது சனிவாரமாம் ஸ்திரவாரமாகும். அதனால் வாரத் தின் ஏழு நாட்களும் நல்ல நாட்களே. நல்லவர்க்கு நல்லதை செய்பவர், சனிபகவான். ஜீவசிவ ஐக்கியம் கிடைப்பதும், அருட்பெருஞ்ஜோதிநிலை கிடைத்து திருவடிப் பேரின்பம் நிலையாகப் பெறுவதும் சனிக் கிழமையாம் ஸ்திரவாரத்தில்தான், ஸ்திரமாகக் கிடைக் கும். சனிப்பிரதோஷமே மகா பிரதோஷம். அதிலும் சனிக்கிழமை, வளர்பிறை திரயோதசியில் வருவது உத்தம மகாபிரதோஷம் ஆகும். சிவனும் சக்தியும் ஆனந்த தாண்டவமாடும் புண்ணியகாலம்.

கோளறு திருப்பதிகத்தில் இந்த ஏழு
நாட்களாம்
நவ கோள்களைப் பற்றி திருஞான சம்பந்தர்
கூறியுள்ளார்.

''வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடி மேலணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி
சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே''

''தானொரு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆன சொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே!''

என்று கூறுகின்றார்.

நவகோள்களினால், இறைவனின் நாமம் ஓதும் அடியார்கள், நலியாத வண்ணம், வானில் சிவ சாயுஜ் யம் பெற்று அரசாள்வர் இது உறுதி! ஆணை என் கிறார். சனிக்கு பிறகு பாம்பிரண்டும் உடனே என்பது, இரண்டு பாம்புகள் ராகுவும் கேதுவும் ஆகும்.

ராகம் :- ஹிந்தோளம் தாளம் :- ஆதி

பல்லவி

வானில் இறைவனின் சாயுஜ்யம்
வாக்கில் இறைவனின் சாஹித்யம்

அனுபல்லவி

பூமியில் இறைவனின் சான்னித்தியம்
புருவ நடுவில் இறைவன் ஆடல் நித்யம்
(வானில்)

சரணம் - 1

இதயத்தில் இறைவன் அமர்வான் நித்யம் நித்யம்
ஜீவசிவ ஐக்கியம் தருவான் சத்யம் சத்யம்
ஞானக் கண்ணில் ஜோதியாவான் நித்யம் நித்யம்
கண்மணியாய் துணை இருப்பான் சத்யம் சத்யம்!
(வானில்)

சரணம் - 2

ஜோதியாய் உடலில் புகுவான் சத்யம் சத்யம்
சிரசினைத் தாங்கி ஜொலிப்பான் நித்யம் நித்யம்
சேயைத் தானாக்கி மகிழ்வான் நித்யம்
நித்யம் - சிவ
சாயுஜ்யம் அளித்திடுவான் சத்யம் சத்யம்!
(வானில்)

மெய்யான உடலைப் பொய் என்று நம்பி பொய்யாகிப் போய் விடாதீர்கள். மெய்யாம் உடலை மெய் என்று நம்பி, மெய்யுடலில், மெய்ப் பொருளைக் கண்டு, மெய்யுடன் கலந்து, மெய்சிலிர்த்து, மெய்யுடலில் இருந்து கொண்டே மெய்ப் பொருளின் மகிமையை, மெய்யுலகுக்கு மெய்யாக உரைத்திடல் வேண்டும். மெய்யுடலில் இருந்தால்தானே மெய்யுணர்வுகளாம் பேரின்பம், அதனால் உடலில் உள்ள போதே உடையவனைக் கலந்த திருவடிப் பேரின்ப ஆனந்தம் அனுபவிக்க வேண்டும். வாழ்ந்து மடிய நாம் பூமியினில் பிறக்கவில்லை. வாழ்ந்து சாதிக்கத்தான் வந்துள்ளோம். ஆழ்ந்து உறங்கும் ஆத்மனின் ஞான விழிப்பை, ஞான அறிவைத் தூண்டி விட வேண்டும்.

வாதத்தினால் அறிய முடியாத இறைவனை அனுபவ ஞானத்தினால் உணர்வின்பமாக அடையலாம். ஆன்மாவில் மறைந்துள்ள பரசிவத்தை அனுபவத்தால் அறிந்து சிறக்கனும். இறைவன் நம்முள் சிறந்து விளங்கிட, இறைவனது பற்றும், இறைவனது குணமும் வேண்டும். நம்பிக்கை வேண்டும். மண்ணுயிர் யாவும் தன்னுயிர் போல் எண்ணி இன்பத் துன்பத்தினில் உதவிட வேண்டும். ஒற்றுமையுடன் வாழ்ந்து மனித நேயத்தையும், ஆன்ம நேயத்தையும் வளர்க்கவேண்டும். தான் நல்லவனா கெட்டவனா? தனக்கு எது தெரியும்? எது தெரியாது என்று தன்னைப்பற்றி தான் உண்மை



யாக உணர வேண்டும். உணர்ந்தவனே சிறந்தவன். பிறர் நலனுக்காக வாழ வேண்டும். யார் மனதையும் புண்படுத்தாமை வேண்டும். சக்தியின் குணமாம் சத்துவகுணம் வேண்டும். ஆசைகளை அடக்காமல் அடக்கிட வேண்டும். ஆசை எனும் சுவைகளை சுவைப்பதற்காகத்தான் இறைவன் படைத்துள்ளான். சுவைகளை நாம் சுவைக்கத்தான் வேண்டும். அந்த சுவைகள் நம்மை சுவைத்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆசை என்னும் கடலிலே மிதக்கத் தான் வேண்டும். மூழ்கிவிடக் கூடாது, இறைவனின் நாமத்தை சொல்லி, மிதந்து வர வேண்டும்.

உலகில் குடும்ப பிரச்சனைகள் கூட நாவடக்கம் இல்லாமையினால்தான் ஏற்படுகின்றது. பல அரிய உதவிகள் செய்யும் இனிய நாவால் இனியவைகளைப் பேச வேண்டும். உண்ணும் உணவு செரித்திடவும், உணவின் சுவை முழுதும் ருசித்திடவும், எண்ணிடும் எண்ணங்கள் உரைத்திடவும், பண்ணிசைத்துப் பரமனைப்பாடிடவும் உதவிடும் இனிய நாவால் இனியவைகளைப் பேச வேண்டும். சொல்லறம் இல்லாது நல்லறம் இல்லை. இல்லறம் இல்லாது துறவறம் இல்லை. இனியவை இல்லாதவற்றை பேசுவதால் வாழ்வினில் பலபல இன்னல்களே. இனிய பேச்சினால், இனிய செய்கையினால், இறைவனின் பேரின்பத் திருவடியே, நாவடக்கத்தால் ஆத்மன் பரமாத்மன் திருவடியைக் கூடிடும். பஞ்சபூதங்களும் நவகிரகங்களும் நன்மையே செய்திடும்.

ராகம் :- ஆபேரி தாளம் :- ஆதி

பல்லவி

நாவினை அடக்கினால் ஞானியாகலாம் - மனிதன்
நாவினை அடக்கினால் ஞானியாகலாம்

அநுபல்லவி

நாவின் பேச்சையும் நாவின் ருசியையும்
அடக்காமல் அடக்கினால் ஞானியாகலாம்
(நாவினை)

சரணம் - 1

நாவினை அடக்கி உண்ணும் சாத்வீக உணவினால்
நம் உடலும் உள்ளமும் நம் வசம் ஆகிடும்
நாவினை அடக்கி பேசும் இனிய அன்பு
பேச்சினால்
பிறர் உடலும் உள்ளமும் நம் வசம் ஆகிடும்.
அளவாக அடக்கமாக உண்ணுங்கள் - நாளும்
இனிமையாக இதமாகப் பேசுங்கள் (நாவினை)

சரணம் - 2

நல்லவற்றை பேசி நல்லுணவை ருசித்து
அடக்காமல் உன் நாவை அடக்கிவிடு
கெடுதலை பேசாமல் கெடுதலை உண்ணாமல்
அடக்கி விடு உன் நாவை அடக்கிவிடு
நல்ல நல்ல உணவாக உண்ணுங்கள் - நாவால்
நட்பு உறவாகப் பேசுங்கள் (நாவினை)

சரணம் - 3

நாவினை அடக்கினால் பக்தியும் கூடிடும்
நாவினை அடக்கினால் சக்தியும் கூடிடும்
நாவினை அடக்கினால் முக்தியும் கூடிடும்
நாவடக்கத்தால் ஆத்மன் பரமாத்மனைக் கூடிடும்
பரமாத்மன் திருவடியைக் கூடுங்கள்
பரத்துடன் பரமாகி ஆடுங்கள் (நாவினை)

இறை ஒன்றே. நம் இலட்சியம் ஒன்றே. மனங்கள் ஒன்றே. மதங்கள் ஒன்றே. தாயும் தந்தையும் இரண்டல்ல ஒன்றே. சிவனும் சக்தியும் இரண்டல்ல ஒன்றே. பலநிறப் பசுக்கள் இருப்பினும் பாலின் நிறம் ஒன்றே. பலவாறு அடியார்கள் உரைத்தாலும் உண்மை யாம் இறைவன் ஒன்றே. பல உருவ தெய்வங்கள் இருந்தாலும், அருவ ஜோதி தெய்வம் என்பது ஒன்றே. மதங்கள் பலவாக இருந்தாலும் எல்லா மதங்களின் கொள்கைகள் ஒன்றே. பாதைகள் பலவாக இருப்பி னும், நாம் அடைந்திடும் இலட்சியம் ஒன்றே. அகிலத் தின் அன்புத்தாய் தந்தையாம், நமது அன்புத் தாய் தந்தையாம் அருட் பெருஞ் ஜோதி தெய்வம் ஒன்றே!

ஊனக்கண் இரண்டு ஆனாலும் நமது ஞானக் கண் என்பது ஒன்றே. கேட்டிடும் செவிகள் இரண்டு ஆனாலும், கேள்வி ஞானம் என்பது ஒன்றே. நாக்கு இரண்டு ஆனாலும் பேசும் வாக்கு என்பது ஒன்றே. மூக்கு இரண்டு ஆனாலும் அவை நுகரும் வாசனை என்பது ஒன்றே. கைகள் இரண்டு ஆனாலும், செய் திடும் செயல்கள் ஒன்றே. கால்கள் இரண்டு ஆனா லும் நாம் போகும் இடம் ஒன்றே. உள்ளம் இரண்டு ஆனாலும் உண்மை என்பது ஒன்றே. உருவம் இரண் டானாலும் நாம் வசிக்கும் உடல் என்பது ஒன்றே. எத்தனை உணர்வுகள் ஆனாலும் அத்தனைக்கும் உடல் ஒன்றே. எத்தனை உடல்கள் ஆனாலும் இத்தனை உணர்வுகளும் ஒன்றே. இத்தனை உணர்வுகளுக்கும் காரணமாம் உடலில் ஆத்மனும் ஒன்றே. இத்தனை உடலின் ஆத்மனுக்கும் பரமாத்மன் என்பது ஒன்றே. இரவு பகல் என, இன்பத்துன்பம் என, நன்மை தீமை என, பொய்மை உண்மை என உணர்வுகள் எல்லாம் இரு வித உணர்வுகளாகும். இரண்டு உணர்வுகளும் ஒன்றிடணும். இரண்டு உணர்வுகள் ஒன்றி விட்டால் ஆத்மனும் பரமனும் ஒன்றே. இரண்டு உணர்வுகள் அடங்கி விட்டால், இரண்டற்ற ஒன்றாம் பரஞ் ஜோதியே. இரண்டற்ற பரஞ்ஜோதி ஒன்றே ஒன்று.

இறைவனாக விரும்பி வந்து அணைத்து திரு வடிப் பேரின்பம் தந்தால் அன்றி இறைவனை அடைந்திட முடியாது. சிவனே உடலில் புகுந்து தத்துவ விளக்கங்களை விளக்கினாலன்றி தத்துவங்களைத் தன்னுள் உணரமுடியாது. இறைவன் விரும்பித் தன் குழந்தை என்று தேர்ந்தெடுத்து அழைத்துச்சென்றாலே அன்றி இறைவனை அடைய முடியாது. இறைவன் விரும்பி நம் உடலில் இறங்கினால் அன்றி கரைந் தழைத்து துணிந்து உரைக்க முடியுமா?

ராகம் :- மோஹனம் தாளம் :- ஆதி

பல்லவி

இறைவன் நம் உடலில் இறங்கினால் அன்றி
கரைந்தழைத்து துணிந்துரைக்க முடியுமா?

அனுபல்லவி

இறைவன் இன்றி அருட் பாடல் பாட முடியுமா?
இறைவன் இன்றி ஜோதி நூல் எழுத முடியுமா?

சரணம் - 1

நாவினை அடக்கித்தவம் யோகம் செய்ய முடியுமா?
அடயோகம் செய்து குண்டலினி
எழுப்பிடத்தான் முடியுமா?
இறைவன் துணை இன்றி திருவடி இணைந்திட
முடியுமா?
தான் அவனாகித் தாண்டவம் ஆடிட முடியுமா?
(இறை)

கைகொடுப்பாள் காளிகாம்பாள்

– இராஜேஸ்வரி விஸ்வநாதன்

அன்னை காளிக்(கு) அர்த்த ஜாமத்திற்(கு)
ஆரங்கள் பாலுடன் போகுதம்மா
அன்பாய் இருக்கும் அர்த்த நாநரிக்(கு)அது
ஆனந்த படைப்பாய் ஆகுதம்மா.

கரைந்து இனிக்கும் கரும்பின் பொடியுடன்
காய்ச்சிய பாலும் இருக்குதம்மா
கலந்து சிறக்க கனிவகை பலவும்
காளிகாம் பாளுக்கு ஏற்குதம்மா.

கஷ்டங்கள் நீங்கிக் கடுந்துயர் போக
கணக்கிலா நன்மைகள் வேண்டுமம்மா
கனிவுடன் பாட்டும் கறையிலாக் கூட்டும்
காட்டிடும் வாழ்வினில் வேண்டுமம்மா.
படைத்து அளிக்கும் பாலைப் பருகினால்
பாவங்கள் எல்லாம் நீங்குதம்மா

பகிர்ந்து கொடுக்கும் பண்பு பெருகியே
பாசங்கள் உயர்ந்து வளருதம்மா

பார்த்துக் களிக்கும் பாமர நெஞ்சினில்
பரவசம் நன்றாய் ஓங்குதம்மா
பாரினில் உயிர்கள் பலவகை செயலினில்
பக்தியால் ஒன்றாய் ஓங்குதம்மா.

மறைந்து கொடுத்தல் மறைந்து கெடுத்தல்
மனங்களிலிருந்து ஓடுதம்மா
மழலை விருப்பம் மங்கல முடிச்சு
மனநிறை வாழ்க்கை கூடுதம்மா.

அவசிய வேலை அவசரத் தேவை
அன்னையின் அருளால் கிடைக்குதம்மா
ஆனந்த கோலம் ஆன்மீக தாகம்
அதற்கே பாலைப் படைத்தோம் அம்மா.

சரணம் - 2

உலகில் உள்ளதை உடலில் கண்டிட முடியுமா?
ஹோம குண்டங்கள் உடலில் கொண்டிட
முடியுமா?
கண்ணின் ஜோதி கந்தன் இன்றி தெளிந்தறிய
முடியுமா?
கந்தன் கருணை இன்றி திருவடியும் கிடைக்குமா?
(இறை)

சரணம் - 3

கந்தனின் கருணையை சொல்லத்தான் முடியுமா?
அனுபவப் பேரின்பம் சொல்லில்தான் அடங்குமா?
பிறப்பு இறப்பற்ற இன்பம் அடைந்திட முடியுமா?
பேரின்ப அருட்ஜோதி தெய்வமாக முடியுமா?
(இறை)

மனிதன் நல்லதைப் பார்த்து, நல்லதைப் பேசி, நல்லதைக் கேட்டு, நல்லதை நினைத்து, நல்லதைச் செயல்படுத்தி, நல்லவனாக, ஆத்ம திருப்தியுடன், கடமைகளை செய்யவேண்டும். பிறரை ஏமாற்ற எண்ணித் தன்னையே ஏமாற்றி கொள்ளக் கூடாது. நம்மை நாம் ஏமாற்றிக் கொள்ளாமல் இருந்தால், இறைவனிடம் ஏமாறவே மாட்டோம். ஏமாற்றமில்லாமல் அருள் புரிவான்.

வெற்றி என்றால் அது மதியின் வெற்றி! தோல்வி என்றால் அது விதியின் சக்தி. விதி விதி என்று நம்பிடும் அன்பரும் விதிக்கும் ஒரு விதி காணணும். விதிவழி மதி சென்றுவிடாமல், மதிவழி விதி வரச் செய்திடணும். விதி தாழ்ந்தால் மதி வளரும். மதி தாழ்ந்தால் விதி வளரும். விதி வழி மதி சென்று விடாமல் மதி வழி விதியைத் திருப்பிடணும்.

இது போன்று இறைவனருளில் ''அருட்பெருஞ் ஜோதியின் சிறப்பு'' என்ற புத்தகம் எழுதியுள்ளேன். தத்துவவிளக்கங்களும், மேடை சொற் பொழிவும் புத்தகமாக எழுதியுள்ளேன். இறைவனருளில் 1500 பாடல்கள் அருளுரை அறிவுரைகளும் எழுதி வைத்துள்ளேன். காக்கைப் போல் கரைந்தழைத்து பகிர்ந்து ஞான உணவை அளிக்கின்றேன். கற்பித்து உரைக்கின்றேன். எல்லாமே இறைவனை அறிய அடைய ஆர்வமுள்ளவர்களான உங்களுக்காக.

''பஞ்சபூதம் ஆனாலும் நவகிரஹம் ஆனாலும்
ஆத்மனே ஆனாலும் பரமாத்மன் ஆனாலும்
சிவகங்கை ஆனாலும் உமை மங்கை ஆனாலும்
அத்தனையும் நமக்குள்ளே ஞானதங்கமே!
இத்தனையும் அனுபவமே ஞானதங்கமே!

எத்தனை தான் உரைத்தாலும் இத்தனை
உபதேசமும்
அத்தனையும் கேட்பவர்க்கே ஞானத்தங்கமே!
இத்தனையும் ரசிப்பவர்க்கே ஞானத்தங்கமே!
இத்தனையும் ருசிப்பவர்க்கே ஞானத்தங்கமே!
ஞானத் தங்கமே!

* * *

சுயம்பு ஜோதியான சுதந்திர ஜோதியே!
சுயம்புவான உன்னை வையகமும்
பெற வேண்டும்!
யான்பெற்ற இன்பம் இந்த வையகமும்
பெறவேண்டும்!
ஓம்! ஓம்! ஓம்!
அருட் பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!
தனிப் பெருங் கருணை! அருட்பெருஞ்ஜோதி!

பிணியேயறியோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை

- பேராசிரியர் ஜே.ஜி. கண்ணப்பன்

நாகரிக உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் எல்லோரும் இன்பமாக வாழ வேண்டும், துன்பமும் பிணியும் வராமல் இருக்க வேண்டும் என எண்ணுகிறோம்.

இது போலவே அரசும் மக்கள் பிணியின்றி வாழ வேண்டும், ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று பல நலத் திட்டங்களை உருவாக்குகிறது.

சுகாதாரத்திற்கே தனி அமைச்சகமும் உண்டு. அதற்காக நாடு முழுவதும் வல்லுநர்களும், நிபுணர்களும் குழுவாகத் திட்டமிட்டு வருகின்றனர்.

உலக சுகாதார நிறுவனம் (World Health Organisation) உலகம் முழுவதும் மக்கள் நோயற்ற வாழ்க்கையை வாழ வேண்டும் என்கிறது.

''பிணியறியோம் இன்பமே எந்நாளும்
துன்பமில்லை'' - அப்பர் அடிகளார்
(ஆறாம் திருமுறை, திருத்தாண்டகம்)

இந்த நல்ல மனித நிலையினைத்தான் உலக சுகாதார நிறுவனம் (World Health Organisation) கி.பி. 2000 ஆண்டிற்குள் உலக மனிதர்கள் அடைய வேண்டுகிறார்கள். இந்த நல்ல நல நிலையினையடைய, எல்லாச் சமூகத்தினருக்கும், அரசுக்கும் கொள்கைப் பணியாக உலக நலச்சங்கம் சமர்ப்பித்துள்ளார்கள். இதனையேற்று அரசும் திட்டங்கள் தீட்டிச் செயலாற்றி வருகிறது. எனினும் தனிப்பட்டவர்கள் தன்னிறைவாக இந்த நலனைப்பெற ஏது செய்ய இயலும் என்பதனை இக்கட்டுரை மூலம் அறிவோம்.

இயற்கையினால் படைக்கப்பட்ட உயிர் இனங்கள் உணவு முறையை ஏற்றுக் கொண்டுள்ளன. இயற்கை வளங்கள் உள்ளதாகில், உயிரினங்கள் செவ்வனே பிறந்து, வளர்ந்து தமது இனப் பெருக்கத்தைக் கொண்டு செலுத்துகிறது. இயற்கையின் வறட்சியால் உயிரினங்கள் தவிப்பது மட்டுமில்லாமல் இயல்பாகத் தளர்ந்து, வதங்கி அழிந்து போகலாம்.

அதுபோலவே, மனிதனும் இயற்கை வளங்கள் இருப்பின், இயற்கையோடு இயைந்து வாழ்வானேயானால், அவனது வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இல்லையெனில், மனிதனும் பிணியுற்று, வறுமையில் வாடி, துன்பமடைந்து, இன்பம் இல்லாது துயரம் அடைவது உண்டு. அதனை வளரா நாடுகளில் பெருமளவில் துல்லியமாகக் காண்கிறோம்.

வளர்ந்த நாடுகளில் எல்லா நல்ல வளங்களையும் பெற்று, சர்வ சாதாரணமாக மனிதன் சராசரி அறுபது வயதிற்கு மேல் வாழ்கின்றான் என்பதனை அறிகிறோம். வளரும் போது, சாதாரணமாகப் பாதிக்கக் கூடிய நோய்கள் என்று கூறக் கூடியவையும் பாதிக்காத அளவு, மனிதனின் உடல் நலம் மேலை நாடுகளில் உள்ளதைக் காண்கிறோம். வளரா நாடுகளில், பிணிகளால் பாதிக்கப்பட்டு, இளமையிலே, ஏன் குழந்தைப் பருவத்திலேயே இறப்பு ஏற்படுவதைக் காண்கிறோம். இவற்றைத் தவிர்க்க இயலும். மேலும் பிணியில்லாமை கொண்ட சமூகம் ஏற்படுத்த முடியும் என்ற அறிவியல் வாழ்வு முறையை இன்றைய நாளில் நாம் அறிந்துள்ளோம். இதனை முடியும் என்ற முறையில் வள்ளுவர்,

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்குஇவ் வைந்து.

என்று கூறி, நாட்டின் அணியாக, சுபிட்சமாகத் திகழ முதல் முன்னோடியாக ''பிணியின்மை''யைக் குறிப்பிடுகிறார்.

பிணியில்லாத சமூகம் இருக்க முடியுமா என்ற கேள்விக் குறியினை நாம் கேட்கிறோம். முடியும் என்று மருத்துவக்குழாம் கூறுகிறது. எப்படி? கீழ்க்கண்ட முறைகளினால் முடியும். ஒவ்வொருவரும் கீழ்க்கண்ட வெகு எளிதான, மற்றும் இலகுவான முறைகளில், தம்முடைய பொருளாதாரத்திற்கு ஏற்ற வகையில் பிணியில்லாத மனிதனாக நடத்திக் காண்பிக்க இயலும்.

வாசகர் எண்ணங்கள்

சென்ற இதழில் வெளிவந்த ஆணையாளர் அவர்களின் ''இவரைப் பொருள் உணர மாட்டாதார்'' காரைக்கால் அம்மையார் பாடல் விளக்கம் அருமையிலும் அருமை; இது பொய் கலவா உண்மை. இதுபோன்ற பயனுள்ள கட்டுரைகள் வழங்கும் ''திருக்கோயில்'' இதழ் வாழ்க! வளர்க! வெல்க!

- திருமதி லலித குமாரி, திருச்செந்தூர்.

''படைத்தோன் மன்ற அப்பண்பிலாளன்'' என்ற புறப்பாடலையும், திருக்குறளையும், பாரதியார் பாடலையும் எடுத்துக்காட்டி அவர்கள் இறையருளாளர்களே எனத் தெளிவுபடுத்தியிருக்கும் ஆணையாளர் அவர்களின் சிந்தனைச் சிறப்பைப் பாராட்டுகின்றேன்.

- செல்வி அ. நிறைமதி, சென்னை - 15.

''மகாமாரியம்மன் வரலாறு'' மிகச்சிறந்த ஆய்வுக்கட்டுரையாக அமைந்து விளங்குகின்றது. ஆடிமாதத்தில் அம்மனின் வரலாறு படித்துப் பரவசமுற்றேன்; பயன் பெற்றேன்.

- ஜி. கணேசநாயகம், கும்பகோணம்

நைவேத்தியம் பிரசாதம் - அருமையான தகவல் தொகுப்பு. கட்டுரையாளருக்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள்.

- ம. குப்புசாமி, மயிலாப்பூர்.

★ முதலாவதாக, சுகாதார முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்

★ இரண்டாவதாக, ஊட்டச்சத்து உணவுகளை உட் கொள்ள வேண்டும்.

★ மூன்றாவதாக, நோய்த் தடுப்பு முறைகளை அனுசரிக்க வேண்டும்.

★ நான்காவதாக, நல் வாழ்வு வாழ்க்கைக் கல்வி முறைகளை, அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்பப் பெற வேண்டும்.

★ ஐந்தாவதாக, நல்ல வாய்ப்புகளையும் வாழ்வு முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

மேலே காட்டியவற்றை விவரமாக ஆராய்வோம்:

கல் தோன்றி மண்தோன்றாக் காலத்திலிருந்தே மனித வாழ்க்கையில், தமிழ் நாட்டில் சிறந்த சுகாதார விதிகளைக் கடைப்பிடித்து வந்தார்கள். அவர்கள் கூற்றில், ''சுத்தம் சுகம் தரும்'', ''சுத்தம் சோறு போடும்'' என்று கூறியது மட்டுமல்லாமல் அறிவுரையாக,

''கந்தையானாலும் கசக்கிக்கட்டு''
''கூழானாலும் குளித்துக்குடி''

என்று கூறியுள்ளதை வாய் மொழியாக நாம் அறிகிறோம். மேற்கூறிய அறிவுரைகள் சாதாரணமாகவும், எளிமையாகவும் தென்பட்டாலும், நம் நாட்டிற்கு வேண்டிய முக்கிய அடிப்படைச் சுகாதார விதியாகும் என்பதனை நாம் அறிய வேண்டும். நம் நாட்டில், புழுதிகளும், அழுக்குகளும் மிகுதியாகச் சூழ்ந்திருப்பதைப் பார்க்கிறோம். சூரிய ஒளியின் வெப்பத்தால் வியர்வை உடலில் உண்டாகிறது. நமது உடலிலே, கழிவுப் பொருட்களை வெளியேற்றும் முறையாக வியர்வையும் ஒருவழியாக உள்ளது.

நமது உடலின் உள் அவயவங்களை நோயினின்றும் காப்பாற்றுவதற்கும், நுண்ணிய நோய்க் கிருமிகள் உடலினுள்ளே புகாவண்ணமும், உடலின் வெப்ப தட்ப நிலையினைச் சீராக அமைக்கும் விதமாகவும் உடலைப் போர்த்திய தோல் பயன்படுகிறது. ஆகையினால், மனிதத் தோல் தூய்மையாக இருக்க, நாம் அறிந்த சுகாதார முறை ''குளிப்பது'' ஆகும். குளிப்பது என்பது நாம் அன்றாடம் கடைப்பிடித்து வருகின்ற முறை எனினும், நலவாழ்வு விதி அறிந்து கடைப்பிடிப்பது சாலச் சிறந்தது. குளிரான தட்ப நிலை இருப்பின் வெந்நீரில் குளிப்பது பரவாயில்லை. மற்றைய வெப்ப நாட்களில், குளிர்ந்த நீரில் குளிப்பது நல்லது. அதனை உடலை ஊக்குவிக்கும் நிலையில் ''அக்கு பஞ்சர்'' முறை மருத்துவமாகக் கூடக் கொள்ளலாம்.

உடலைச் சுகாதாரமாக வைப்பது மட்டுமல்லாமல், வீட்டுச் சுகாதாரமும், சுற்றுப் புறச் சுகாதாரமும் மிகவும் தேவை. இந்த முறைகளை நாம் அறிந்து அந்த முறைகளைக் கடைப்பிடிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். அந்த முறையாக, மிக முக்கியமாக, தமிழிலே தூய உடைகளை உடுத்துவது சிறந்ததென் பதை, ''கந்தையானாலும் கசக்கிக்கட்டு'' என்று கூறியுள்ளார்கள்.

இரண்டாம் சிறப்பான முறை, ஊட்டச்சத்தினை ஆர்வமாக ஏற்றுக் கொள்வதைக் கடைப்பிடிக்க வேண்டும். நமது நாட்டிலே, நிலம் என்னும் நல்லாள் நல்கும் காய்கறிகள், பழங்கள், கீரைகள், தானியங்கள், மற்றும் பருப்பு வகைகள் அதிக அளவில் விளைவிக்கப்படுகின்றன.

பல ஐந்தாண்டுத் திட்டங்களால் சீரமைக்கப்பட்ட விதிகளினால், நம்நாட்டு உணவுப் பண்டங்கள் தேவைக்கு மேல் கிடைக்கும்படியாக, ''பசுமைப் புரட்சி'' (Green Revolution) ஏற்படுத்தியுள்ளோம்.

வளரும் உடலுக்குத் தினமும் வளமுடன் வாழ வேண்டி உட்கொள்ள வேண்டிய ஊட்டச்சத்துக்கள், மேற்கூறிய தானியங்கள், பருப்பு வகைகள், காய்கறிகள், கீரை வகைகள் நம் நாட்டிலேயே கிடைக்கின்றன. இவற்றை நமது வீட்டிலேயே வளரச் செய்யவும் முடியும்.

தினமும் ஒரு கீரை, இரு காய்கறி என்று உணவில் சேர்த்துக் கொண்டால் நலவாழ்வு நிச்சயம். நல்ல உயரமும், வேண்டிய பருமனும் ஒருவர் பெற இயலும், வேலைப் பளுவினால் அசதி அடையாமல், தொடர்ந்து ஒருவரால் பணியாற்ற இயலும். ஆனால், நமது நாட்டிலே நிலவும் தவறான எண்ணங்களினால், நாம் உண்ணும் பல பண்டங்களை ஒதுக்கிவிடும் பாங்கினைக் காண்கிறோம். இது 'சூடு' இது 'குளிர்' இது 'வாயு' இது 'மூட்டினைப் பிடிக்கும்'. இது 'ஜீரணிக்காது' என்ற தவறான எண்ணத்தில் ஊட்டச் சத்தினைக் கொண்ட காய்கறிகளை, பழங்களை ஒதுக்கிவிடுகிறோம். மேலும், மகளிர், சமைத்த ருசியான உணவினை ஆண் மக்களுக்கு மட்டும் பகிர்ந்துவிட்டு, தாமும் குழந்தைகளும் பகிர்ந்து கொள்வதில்லை.

அதனால் தென்னிந்தியாவில், மகளிர் ஊட்டச்சத்துக் குறைவினால் இரத்தக் குறைவு, சோகை நோய் போன்ற நோய்களுக்கு உட்படுகிறார்கள்.

வளரும் சிசு பலமாக இருக்க வேண்டுமானால், கருவுற்ற தாய் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். கருவுற்ற தாய் பேணும் சிசுவிற்குப் பூரண ஊட்டச்சத்து கொடுப்பதன் காரணத்தால், தாய் தானும் நல்ல ஊட்டச் சத்தினை ஏற்றுக் கொள்ள வேண்டும். இல்லையென்றால், கருவறையில் வளரும் சிசுவும் வளர்ச்சியின்றி வாடும். தாயும் நோய்வாய்ப்பட்டு வலுவிழக்க நேரிடும். நமது நாட்டிலே கிடைக்கும் எண்ணற்ற காய்கறிகள் மேற்கூறிய எந்த விதக் குறைகளைக் கொண்டவையுமல்ல. மேலை நாட்டு மருத்துவ வல்லுநர்கள், இந்தியா வந்து பார்வையிட்டபோது, ''இவ்வளவு ஊட்டச்சத்துக்குறைவு இந்திய மக்களிடையே, முக்கியமாக மகளிரிடையே உள்ளது'' என்பதை அறிந்து ஆச்சரியப்பட்டனர். அவர்கள் சமூகத்தில் சென்று ஆராய்ந்தபோது, நமது சமூகத்திலே, முக்கியமாக இந்தியப் பெண்களிடையே உணவுப் பொருட்களின் மேல் நிலவிய மேற்கூறிய தப்பு அபிப்பிராயத்தைக் கண்டார்கள். இதனை உணர்ந்து அறிவியல் சார்ந்த ஆய்வு கூறியபடி கருவுற்ற தாய் நல்ல ஊட்டச்சத்து உணவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பிறந்த குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். பிறந்த மூன்றாம் மாதத்திலிருந்து தாய்ப்பால் மட்டுமின்றி நல்ல ஊட்டச் சத்து உணவினைக் கொடுக்க வேண்டும். எல்லாக் காய்கறிகளையும், கீரைகளையும், பழங்களையும் வளரும் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். தவறான அபிப்பிராயத்தை நீக்கி, தாய் ஊட்டச்சத்தினை ஏற்றுக் கொள்வாளேயாயின், பிறக்கும் குழந்தை நல்ல உருவத்தையும் பருமனையும் பெறுவதற்கு வாய்ப்புண்டு. இல்லையென்றால் உயரம் பருமன் ஆகியவற்றின் வளர்ச்சியும் குன்றி, வதன வடிவமைப்பும் சீர்குலையும்.

நம்நாட்டுத் தின்பண்டங்கள் பனைவெல்லம், நாட்டுச் சர்க்கரை வெல்லம் கொண்டு செய்யப்படுவதால், வேண்டிய சக்தியளிக்கும் ஊட்டச்சத்து கொண்டுள்ளன. வெண் சர்க்கரை திடீர் சக்தியினை அளிக்குமேயன்றி, தீய விளைவுகளைக் கொடுக்கும்.

நோய் தடுப்பு முறைகளை குழந்தை பிறந்த முதல் மாதக் காலத்திலேயே அனுசரிக்க வேண்டும். முன்காலத்தில், குழந்தைப் பருவத்தில் தாக்கும் பிணிகளினால், ஏராளமான குழந்தைகள் இறந்து கொண்டிருந்தன. மேலும் பல குழந்தைகள் உடல் ஊனத்தினால் பாதிக்கப்பட்டார்கள். கண்கள் ஒளியிழந்தும், கால், கைகள் வேலை செய்ய முடியாமலும், மூளை பாதிப்பு ஏற்பட்டும், வாழ்நாள் பூராவும் அவதியுற்றனர்.

இவ்விதமான பாதிப்பு, வளரா நாடுகளிலும், அறியாமையுள்ள சமூகத்திலும் மிகவும் காணப்படுகிறது. மற்றும் குழந்தை இறப்பும் அதிகமாக இருக்கிறது.

ஆனால் இந்தச் சூழ்நிலையினை அறவே தவிர்க்க இயலும், வளர்ந்த நாடுகளிலும், அறிவியல் சார்ந்த நாடுகளிலும் சாதாரணமாகக் குழந்தைகளைப் பாதிக்கும் நோய்கள் குழந்தைகளை அணுகா வண்ணம், நோய்த் தடுப்பு முறைகளை ஏறறுக் கொள்ளுவதன் மூலம் குழந்தைகள் இறப்பைத் தடுத்து விட்டார்கள் என்றும், உடல்நிலை பாதிப்பு என்பதனைத் தவிர்க்க இயலும் என்பதையும் ஊர்ஜிதம் செய்து விட்டார்கள்.

மக்களுக்கு, கல்வியறிவு மிக மிக முக்கியம். இதனை உணர்ந்து தமிழ் மொழியில் ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'' என்று கூறினார்கள். கண்களுக்குப் புலப்படும் ஞானம், ஒளிமயமானது. எத்தனையோ நவீனங்களையும் புதுமைகளையும் இன்றைய பொறியியல் மற்றும் மருத்துவ அறிவியலால் பெறுகிறோம். இந்த நவீனங்களும், புதுமைகளும், நமது வாழ்க்கை முறையை அப்போதைக்கப்போது மாற்றி அமைக்கின்றன. உடலின் வேலைத்திறனை மிகுவிக்கிறது. நேரம் வீணாவதைத் தவிர்க்கிறது. அதனால், பிரயோசனமான ஆக்க வேலைகளுக்கு அதிக நேரம் செலுத்த இயலுகிறது. இதனால், நமது உடற் சுகாதாரம், வீட்டுச் சுகாதாரம், சுற்றுப்புறச் சுகாதாரம் முதலியவற்றை எளிதில் கடைப்பிடிக்க முடிகிறது. எளிதில் கடைப்பிடிக்கப்படுவது மட்டுமின்றி தொடர்ந்து சுகாதாரப் பணியினைத் தொய்வில்லாமல் செய்து கொண்டிருக்கவும் முடிகிறது.

கல்வியறிவினால் நல்லவை, கெட்டவை அறியலாம், தவறான அபிப்பிராயங்களைத் தவிர்க்கலாம். ஒளிமயமான எதிர்காலத்திற்கு கல்வியறிவு மிக முக்கியம்.

மக்கள் நல்ல வாய்ப்புக்களை வரவேற்க வேண்டும். அறிவு பரவும்போது, உலகம் சுருங்குகிறது. அறிவியல் ஞானம் உடனுக்குடன் பரவுகிறது. இந்த ஞானம் பரவினால் வாழ்வு இயங்கு முறை மாறுபடுகிறது.

தமிழ் மொழியில், ''திரை கடலோடியும் திரவியம் தேடு'' என்பது மட்டுமில்லாமல், பாரதியார் கூறியபடி, ''சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்'' என்பது போல அறிவார்ந்த நல்ல உண்மைகளை உடனே ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பினைப் பெற வேண்டும்.

வாழ்வு முறைகளையும், நோய் ஏற்படின் மருத்துவ முறைகளையும், நோய் வராவண்ணம் தற்காப்பு அறிவியல் சார்ந்த முறைகளையும் ஏற்றுக் கொண்டால், மனிதன் 'பிணியறியோம் எந்நாளும் இன்பமே துன்பமில்லை.' என்ற நிலை பெற்று இன்புற வாழ முடியும்.

ஒருவனது உடல் வளர்ச்சி நன்றாக இருக்கிறது என்பதனை அங்க அடையாளங்கள் காண்பிக்கின்றன. குழந்தைக்கு நல்ல உடல் வளர்ச்சியிருக்க வேண்டும். உடல் ஊனம் கூடாது.

பிறந்த குழந்தை மூன்றாம் மாதத்தில் இரண்டு பங்கு பருமனாகவும், ஒன்பதாம் மாத அளவில் மூன்று பங்காகவும் பருமன் பெற வேண்டும். பிறந்த குழந்தை ஆறாம் மாதத்திலிருந்து இரண்டு வருடங்களுக்குள் தவழ்ந்து ஊர்ந்து நின்று பேசப் பழக வேண்டும். வயதிற்கேற்ற உயரமும், பருமனும் வளரும் பிராயத்திலே இருக்க வேண்டும். உடல் மேல்தோல் நன்றாயிருக்க வேண்டும். மார்புக் கூடுபரந்து விரிந்து இருக்க வேண்டும். மார்புக் கூடு சுருங்கியும் முன்துருத்தியும் இருக்கக் கூடாது.

கைகள், கால்கள் நீண்டும் நேராகவும் இருக்க வேண்டும். வளைந்திருக்கக் கூடாது. கண்களிலே ஒளி படர்ந்திருக்க வேண்டும்.

நல்ல உடல் வளர்ச்சியிருந்தால், உடல் மூளை ஒருங்கிணையும்போது உடல் நலம் நன்றாக இருக்கும். பாரதியார் கூற்றின்படி இளைஞன்.

''ஒளிபடைத்த கண்ணினன்
உறுதி கொண்ட நெஞ்சினன்''

ஆக இருக்க வேண்டும், என்றும் அவனையே, நாட்டின் சுபிட்சத்திற்கு ''வாவா'' என்றும் அறை கூவி, பாரதியார் அழைக்கிறார்.

வள்ளுவர் கூறிய அணியென்ப நாட்டிற்கு ஐந்து எனக் கூறியதில் முதன்மையான ''பிணியின்மை'' யும், அப்பர் கூறிய ''பிணியே யறியோம்'' என்ற சூழ்நிலையும் நமது சமூகத்தில் ஏற்பட இன்றைய மருத்துவ அறிவியல், அடுத்த நூற்றாண்டை நோக்கி அறிவியல் ஆராய்ச்சி பயணம் செல்ல வேண்டும். அறிவியல் தமிழ் வெற்றிபெற வேண்டும்.

''பிணியறியாத மனிதப் பிறவியும்
வேண்டுவதே இம் இம்மானிலத்தே.''

கண்கள் பார்ப்பதில்லை

– கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

கண்ணில் படுவதைக் காண்பது மனமே
காதினில் ஒலிப்பதைக் கேட்பதும் மனமே
கண்ணோடு மனதிற்குக் காதும் உண்டெனில்,
கடவுளைக் காண்பதும், கேட்பதும் மனமே.

எண்ணத்தால் மனத்தை எடைபோட முடியுமோ?
இறைவனை எண்ணத்தால் எய்திட முடியுமோ?
கண்ணொளி இருந்தும், காண்பது மனமெனில்
கடவுளைக் காணக் கண்களால் முடியுமோ?

கடவுளை எண்ணிக் கண்களை மூடினால்
கடவுள் இல்லாத காட்சிகள் முன்வரும்.
உடலால் உழைக்க உண்பதை மிகுத்தால்,
உறங்காது கண்கள் உடலை வருத்தும்.
படரும் ஆசையைப் பலவாய் வளர்த்தால்
பாரமாய் வாழ்க்கை பாரினில் சுமக்கும்.
இடர்தரும் ஐம்புலன் இயக்கம் குறைத்தால்
எளிமையின் தூய்மையில் இதயம் ஒளிவிடும்.

ஆழ்கடல் மனத்தில் அலைகளாய் எண்ணங்கள்
அலைமோதி வாழ்வை அலங்கோலப் படுத்தும்.
சூழ்கின்ற எண்ணங்கள் தொடராமல் நிறுத்தி,
தூய மனத்தோடு தொடர்ந்தால் தியானம்.
வாழ்வினில் நாளும் வணங்கும் பக்தியால்,
வளரும் காலமும் வசந்தமாய் மாறிடும்.
ஊழ்வினை ஒதுங்கிடும்; உய்ய வழிவிடும்
உள்மனம் இறைவனை உயிரோடு பார்க்குமே.

★★★

''சசிமகராஜ்'' ஸ்ரீ இராமகிருஷ்ணானந்தர் தொண்டு

- டாக்டர் வ. ஹேமா

(சென்னை ஸ்ரீ இராமகிருஷ்ணர் கோயில் கும்பாபிஷேக விழா - நிறைவுநாள் - 12.2.2000 அன்று ஸ்ரீ சுவாமி கமலாத்மானந்தர் ஆற்றிய உரையின் சுருக்கம் இது. இதனைக் கேட்டுத் தொகுத்து வழங்கியுள்ளார் டாக்டர் வ. ஹேமா.)

உயர்ந்தவர்களுக்குச் செய்த உதவி அவர்களுடைய மனதில் மிகப்பெரியதாகத் தோன்றும். வாமனர் திரிவிக்கிரமனாக விசுவரூபம் எடுத்தது அது போல் இருந்தது என்று கம்பர் கூறுகிறார்.

சுவாமி ஸ்ரீ இராமகிருஷ்ணானந்தர் இட்ட விதை அப்படித்தான் விசுவரூபம் எடுத்துள்ளது. ஆன்மிகம், கல்வி, மருத்துவம் போன்ற பல துறைகளில், சென்னை இராமகிருஷ்ண மடம் ஆற்றிவரும் மகத்தான பணிகளுக்கு மூலகாரணமானவர் சுவாமி இராமகிருஷ்ணானந்தர். அவருடைய தவத்தின் பயனே இந்த நிறுவனத்தின் வளர்ச்சி. 'சசிமகராஜ்' என்பது அவருடைய பூர்வாசிரமப் பெயர்.

துறக்க முடியாததைத் துறந்தவர்

ஸ்ரீ இராமகிருஷ்ணரின் பக்கத்தில் இருந்து பணிவிடைகள் செய்தவர் ஸ்ரீசசிமகராஜ். நிறையக் கற்க வேண்டும் என்ற ஆவல் கொண்ட 'சசிமகராஜ்' ஒரு முறை பாரசீக நூல்களை ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தார். அப்போது குருதேவர் அவரை அழைத்தார். புத்தகத்தில் ஆழ்ந்திருந்த சசிமகராஜின் காதில் அது விழவில்லை. இரண்டாவது முறை அழைத்தார் குருதேவர். அப்போதும் அவர் எழுந்து செல்லவில்லை. மூன்றாவது முறை அழைத்த பின்பே எழுந்து சென்றார்.

''நான் இரண்டு முறை அழைத்தேன். உன் காதுகளில் விழவில்லை! அப்படி என்ன செய்து கொண்டிருந்தாய்?'' என்றார் ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

''பாரசீக நூல் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தேன்'' என்றார் சீடர்.

''இனி நீ எதுவும் படிக்க வேண்டாம்! செயலாற்று! அது போதும்!'' என்றார் குருதேவர்.

அவ்வளவுதான்! குருதேவரின் வாக்குக்கு மேல் எதுவும் இல்லை, என்று கருதிய சசிமகராஜ் தம் புத்தகங்களை, கங்கையில் வீசி எறிந்துவிட்டார்.

சங்கீத வித்வானால் பாடாமல் இருக்க முடியாது. எழுத்தாளனால் எழுதாமல் இருக்க முடியாது. விளையாட்டு வீரனால் விளையாடாமல் இருக்கமுடியாது. நூல்கள் பல கற்க வேண்டும் என்ற ஆர்வமுடையவனுக்குப் படிக்காமல் இருக்க முடியாது. ஆனால் சசிமகராஜ், குருதேவரின் வாக்கு, அனைத்திலும் சிறந்தது என்று கருதினார். இது அவரது துறவு மனப்பான்மையைக் காட்டுகிறது.

மரபுகளை மதித்தல்

சசிமகராஜ் ஒரு முறை காசிபூரில் நடந்த திருவிழாவைக் காணச் சென்றிருந்தார். திருக்கோயிலைச் சுற்றிலும் சிறு வியாபாரிகள் கடைகள் வைத்திருந்தனர். குருதேவருக்குக் கனிகளை வெட்டிக்கொடுப்பதற்கேற்ற ஒரு கத்தியை வாங்கிவந்தார் சசிமகராஜ்.

விழாக்காலங்களில் மட்டும் விற்பனை செய்யும் வியாபாரிகளை ஊக்குவிக்க வேண்டும். அதனாலேயே திருவிழாக்கடைகளில் ஏதாவது வாங்கி வரவேண்டும் என்ற சம்பிரதாயத்தை முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ளனர் என்று தெளிவு படுத்திய குருதேவர், சசிமகராஜைப் பெரிதும் பாராட்டினார்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு முறை சென்னை மயிலாப்பூரில் கபாலீசுவரர் திருவிழா நடைபெற்ற பொழுது நானும் (கமலாத்மானந்தர்) பத்துப் பதினைந்து விசிறிகள் வாங்கி வந்தேன். மின்சார விசிறிகள் இல்லாத அந்தக் காலகட்டத்தில் அந்த விசிறிகள் மிகவும் பயனுள்ளவைகளாக இருந்தன. குருதேவரின் வாக்கும், சசிமகராஜின் வழிகாட்டுதலும் எவ்வளவு பொருள் பொதிந்தவை என்பது புரிந்தது.

'வ.உ.சி.' வாழ்க்கையில் நடந்தது

'கப்பலோட்டிய தமிழன்' சிதம்பரனாரின் அத்தை ஒருவர் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் பக்தை. அவர் மயிலாப்பூர் மடத்துக்கு ஸ்ரீஇராமகிருஷ்ணானந்தரைக் காண வருவதுண்டு. அவருடன் வந்திருந்த 'வ.உ.சி.'யை, தேசியத்துக்கும், சமுதாயத்துக்கும் தொண்டாற்ற வேண்டும் என்று ஸ்ரீ இராமகிருஷ்ணானந்தர் வலியுறுத்தினார். அதுதான் தமது தேசியத் தொண்டுக்கு வித்திட்ட அருள்மொழி என்று தமது சுயசரிதையில் வ.உ.சி. குறிப்பிட்டுள்ளார்.

அன்னபூரணி அருள்வாள்!

ஒரு முறை ஸ்ரீ இராமகிருஷ்ண ஜயந்தியை ஒட்டி அன்னதானம் அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது. ஆனால், முதல் நாள் மாலை வரை அன்னதானத்துக்கான பணமோ, பொருளோ எதுவும் கிடைக்கவில்லை.

அதுபற்றி, சீடர்கள் மிகவும் கவலைப்பட்டார்கள். அப்போது ஸ்ரீ இராமகிருஷ்ணானந்தர் கூறினார்:- ''நாம் அன்னபூரணி மாதாவை நம்புகிறவர்கள். அவள் நம்மை ஒரு போதும் கைவிடமாட்டாள்.''

அவர் அவ்வாறு கூறிய சிறிது நேரத்தில் அன்னதானத்துக்கு வேண்டிய பொருட்களை ஏற்றி வந்த ஒரு வண்டி மடத்தின் வாசலில் நின்றது!

வினாவும் விளக்கமும்

– பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன், M.A., D.Litt; Ph.D.

(கீழ்க்கண்ட வினாக்களை வினவியவர் சென்னை வேளாச்சேரியைச் சேர்ந்த திருக்கோயில் வாசகர் செல்வி M.L. லட்சுமி அவர்கள்)

வினா 22 : திருக்கோயில்களில் 'துவஜஸ் தம்பம்' வைப்பதன் காரணம் என்ன? அதனை எப்படி வணங்க வேண்டும்?

விளக்கம் : கொடிமரத்தை வடமொழியில் துவஜஸ்தம்பம் என்பர். துவஜம் - கொடி. ஸ்தம்பம் - மரம்.

திருவிழாக் காலங்களில் அந்தந்த தெய்வங் களுக்கு உரிய கொடி இக்கொடிமரத்தில் ஏற்றப்படும். திருவிழாக்கள் கொடியேற்றத்துடன் தொடங்கி கொடி யிறக்கத்துடன் நிறைவு பெறும். இந்துக் கோயில்களில் மட்டுமின்றி வேளாங்கண்ணி தேவாலயத்திலும், நாகூர் தர்க்காவிலும்கூட கொடி ஏற்ற - இறக்கத்துடன் திருவிழாக்கள் நடை பெறுகின்றன.

ஒரே மரத்தில் செய்து நிறுத்தப்படும் கொடி மரம் உலோகத் தகடுகளால் அழகு செய்யப்பட் டிருக்கும். அடியில் கருங்கல் பீடமும், கொடி போன்ற அமைப்பும் இருக்கும். மேலே தொங்கும் சிறிய மணிகள் இனிய ஒலியை எழுப்பிக் கொண்டிருக்கும்.

''ஊனுடம்பே திருக்கோயில்'' என்பார்கள், ஊனுடம்பின் அமைப்பைப் போலவே திருக்கோயில் கள் அமைக்கப்படும். இது பற்றி மற்றொரு வினா விளக்கத்தில் விரிவாகக் காணலாம்.

கொடிமரம் நமது உடலிலுள்ள முதுகெலும் பைக் குறிக்கும். தண்டுவடத்தின் வழியே சுற்றித் தழுவி மேலே எழும்பும் குண்டலினி சக்தியையே கொடி யேற்றம் உணர்த்துகிறதென யோக நூலார் கூறு கின்றனர்.

வானவெளியிலிருந்து நுண்ணலைகளை வாங்கித் தரும் 'ஆளடனா' போன்றதே கொடிமரம். மற்றும் இது 'இடிதாங்கி'யாகவும் செயலாற்று கிறது.

யக்ஞஸ்ரீ என்ற சாதவாகன பரம்பரையைச் சேர்ந்த அரசனின் நாணயத்தில் கொடிமரத்துடன் இருக்கும் கோயிலின் உருவம் பொறிக்கப்பட்டிருந் தது. அவ்வரசன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அரசாண்டவன் என்று வரலாற்று அறிஞர்கள் குறிப் பிடுகின்றனர். எனவே, கொடிமரம் அமைக்கும் முறை ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகள் தொன்மையானது என்பதை அறியலாகும்.

கோயிலின் உட்சுற்று எல்லை கொடிமரம், பலிபீடம், நந்தி அல்லது கருடபகவான் (பெரிய திருவடி) என்ற வரிசையில் முறையே சிவ விஷ்ணு ஆலயங்களில் தொடங்கும். ஆதலால், திருக்கோயிலின் உள்ளே நுழைந்தவுடன் கொடிமரத்தை நின்றபடி கும்பிடுதல் முறையாகும். அடுத்து நந்தி அல்லது பெரிய திருவடியின் அனுமதியுடன் (அதாவது அவர் களை வணங்கி) உள்ளே செல்ல வேண்டும். எல்லாச் சன்னதிகளிலும் தரிசனம் முடித்துத் திரும்பி வந்து கொடிமரத்தின் முன்பு விழுந்து வணங்கி எழுந்து சிறிது நேரம் தியானம் செய்தல் வேண்டும். திருக் கோயில்களில் கொடிமரத்துக்கு முன்னால் மட்டுமே விழுந்து வணங்க (நமஸ்காரம் செய்ய) வேண்டும். வேறு எங்கும் செய்யக்கூடாது. அதுபோல் திருக் கோயில்களில் தெய்வங்களை மட்டுமே வணங்க வேண்டும். மனிதர்களை வணங்குதல் கூடாது என்பர் சான்றோர்.

தெற்குத் திசை நோக்கி விழுந்து வணங்குத லும் கூடாது. மயிலாப்பூர் போன்ற தலங்களில் மேற்குப் பார்த்த சன்னதியின் முன்னே கொடிமரம் இருக்கிறது. இங்கெல்லாம் கொடிமரம் நமது வலப்புறம் வரும் படி விழுந்து வணங்க வேண்டும். மற்ற திசைகளைப் பார்த்த திருத்தலங்களில் கொடிமரம் நமக்கு இடப்புறம் வரும்படி வணங்கலாம்.

சுவாமிமலை முருகன் கோயில் போன்ற தலங் களில் கொடிமரத்துக்குப் பொற்றகடுகள் பொருத்தி யுள்ளனர்; ஆகவே, தங்கம் பாழ்படும்படி உப்பு முதலிய காணிக்கை பொருட்களைக் கொடிமரத்தின் அருகில் செலுத்தாமல் இருப்பது நல்லது. ஆலயப் பாதுகாப்பும் பராமரிப்பும் செய்யும் பணியில் பக்தர்கள் ஒத்துழைத் தல் அவசியமாகும்.

வினா 23: ''ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு அவதாரம் எடுப்பேன்'' என்று பகவான் கூறியிருக் கிறார். அப்படியிருக்க இராமரும் பரசுராமரும் எப்படிச் சந்தித்தனர்?

விளக்கம் : ''தருமத்திற்கு அழிவு ஏற்படும் பொழுதெல்லாம் நான் அவதரிப்பேன்'' என்றும்,

யுகந்தோறும் அவதரிப்பேன்'' என்றும்தான் கண்ணன் கூறியுள்ளான். ''ஒவ்வொரு யுகத்தில் ஒவ்வொரு அவதாரம் எடுப்பேன்'' என்று கூறவில்லை.

யுகங்கள் நான்கு. அவதாரங்கள் பத்து. ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு அவதாரம் என்ற கணக்கு எப்படிச் சரியாகும்?

இராமாவதாரக் காலத்திலேயே பரசுராம அவதாரமும் நடந்தது. இராமரும் பரசுராமரும் திருமாலின் இரு வேறு அவதாரங்கள். ஒரே காலத்தில் நிகழ்ந்தவை. தற்காலத்துக்கு ஏற்ற மொழியில் கூறினால் ''ஒரே நடிகரின் இரட்டை வேடம்''. இரண்டு பாத்திரங்களில் தோன்றும் ஒரே நடிகரின் வேறுபட்ட இரண்டு பாத்திரங்களும் சந்திக்கும் காட்சிகளை நாம் திரைப்படங்களில் காண்கிறோம் அல்லவா! அது போலத்தான் நடந்தது இராமர் - பரசுராமர் சந்திப்பு'.

ஏன்? துவாபர யுகத்தில் சகோதரர்களாகவே திருமாலின் அவதாரம் நடந்தது! கண்ணனும் பலராமனும் உடன் பிறப்புக்கள் அல்லவா? அப்போதும் இரண்டு அவதாரங்கள் இணைந்தே திருவிளையாடல்கள் புரிந்தனர்.

இவை தவிர, பத்து அவதாரங்களில் அடங்காத மோகினி அவதாரம், ஹயக்கிரிவ அவதாரம் போன்ற பல வடிவங்களிலும் திருமால் திருவருள் புரிந்துள்ளார்.

★★★

வினா 24: கிருஷ்ணர் ஒருவர். முருகனும் ஒருவர். அப்படியிருக்க, கிருஷ்ண ஜயந்தி மற்றும் கார்த்திகைத் திருநாளை வெவ்வேறு பகுதியினர் வெவ்வேறு நாட்களில் கொண்டாடுகின்றனரே ஏன்?

விளக்கம் : திருவிழாக்களையும், பண்டிகைகளையும் திதி மற்றும் நட்சத்திரங்களை வைத்து நிர்ணயிக்கின்றனர். திதிகள் பதினைந்து, நட்சத்திரங்கள் இருபத்தேழு.

நட்சத்திரமும் திதியும் குறிப்பிட்ட முறையில் சேர்ந்து வருவதுண்டு. பங்குனி உத்திரமும் பௌர்ணமியும் சேர்ந்து வரும். மார்கழி திருவாதிரையன்று பௌர்ணமி சேரும். மார்கழி மூலத்தில் அமாவாசை சேரும். கார்த்திகைப் பௌர்ணமியில் கார்த்திகை நட்சத்திரமும் சேரும். ஆவணி அவிட்டத்துடன் பௌர்ணமி சேரும். ஆவணி அஷ்டமியில் ரோகிணி நட்சத்திரம் சேரும். சித்திரை அல்லது பங்குனி நவமியில் புனர்ப்பூசம் சேரும். இப்படி இணைந்து வரும் திதியும் நட்சத்திரமும் சில ஆண்டுகளில் முதல் நாள் அடுத்தநாள் என்று மாறி வரும்.

சிவாலயங்களில் பெரும்பாலும் திதியையும், விஷ்ணு ஆலயங்களில் பெரும்பாலும் நட்சத்திரத்தையும் வைத்துத் திருவிழாவை நடத்துகிறார்கள்.

நாயன்மார்களின் திருநட்சத்திரங்களிலும் ஆழ்வார்களின் திருநட்சத்திரங்களிலும் இத்தகைய வேறுபாடு இல்லை. (நட்சத்திரங்களை ஒட்டியே கொண்டாடப்படுகிறது)

இராம நவமியை எல்லோரும் கொண்டாடுகின்றனர். அவரது அவதார தினம் நவமி. நட்சத்திரம் புனர்ப்பூசம் (புனர்வசு). வைணவர்கள் அல்லாதவர்கள் நவமி திதியிலும் வைணவர்கள் புனர்ப்பூசத்திலும் கொண்டாடுகின்றனர். திதியும் நட்சத்திரமும் ஒரே நாளில் சேர்ந்து விட்டால் ஒரே நாளில் அனைவரும் கொண்டாடுகின்றனர்.

அதுபோல் கிருஷ்ணன் பிறந்தநாள் அஷ்டமியும் ரோகிணியும் கூடிய நாள். இரண்டும் ஒரேநாளில் வந்தால் ஒரேநாளில் கிருஷ்ணஜயந்தி. தனித்து வந்தால் ரோகிணியில் வைணவர்களும், அஷ்டமியில் மற்றவர்களும் கொண்டாடுவர். வைகானசம், பாஞ்சராத்திரம் என்ற இரண்டு வைணவ ஆகமங்களின் படியும் கிருஷ்ண ஜயந்தி இருவேறு நாட்களில் கொண்டாடப்படும்.

தீபத்திருநாளை கார்த்திகை மாத பௌர்ணமியில் ஒரு பகுதியினரும், கார்த்திகை நட்சத்திரத்தில் ஒரு பகுதியினரும் கொண்டாடுகின்றனர்.

மார்கழியில் திருவாதிரையும் பௌர்ணமியும் ஒரேநாளில் வராத பொழுது தில்லையில் ஆருத்ரா தரிசனம் திருவாதிரை நட்சத்திரத்தில் நடைபெறும். மற்ற சிவாலயங்களில் பௌர்ணமி நாளில் நடைபெறும். மயிலாப்பூர் போன்ற கடற்கரை ஊர்களில் பௌர்ணமி நாளில் கொண்டாட வேண்டுமென ஆகம நூல்கள் குறிப்பிடுகின்றன.

மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயிலில் புன்னிரு திருமுறை விழா ஆவணி மாத முதல் ஞாயிறு நிறைவு பெறும் வகையில் தொடங்கப்படுகிறது. வனபோஜன விழா தைமாத ஞாயிறு ஒன்றில் நடைபெறும். இதுபோல், உள்ளூர் மரபுகளுக்கு ஏற்ப திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

புதிய விழாவான படி உற்சவத்தை ஆங்கிலப் புத்தாண்டு நாளில் கொண்டாடுகின்றனர்.

வெவ்வேறு நாட்களில் நடைபெறுவது சில நேரங்களில் குழப்பத்தை ஏற்படுத்தினாலும் அதன் பயன் நன்மையில்தான் முடிகிறது.

சிறிய கிராமத்தில் இருக்கும் ஒரே பூ வியாபாரியும், நாதசுர வித்துவானும் இது போன்ற சூழ்நிலையில் நெருக்கடி இன்றி இருவேறு நாட்களில் தமது பணிகளைச் செய்ய முடிகிறது.

பொதுமக்களும் தமது ஊர்த் திருவிழாவை ஒரு நாளிலும், வெளி ஊர்த் திருவிழாவை மற்றொரு நாளிலும் கண்டு மகிழ இயல்கிறது.



திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் ஆலயத்தில் 15.8.2000 அன்று சுதந்திரத் திருநாள் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். திருக்கோயில் இணை ஆணையாளர்–செயல் அலுவலர் திரு மு.க. பாலசுப்பிரமணியம் அவர்களும், அறங்காவலர் குழுத்தலைவர் திரு டெக்கான் என்.கே. மூர்த்தி மற்றும் அறங்காவலர்களும் விழா ஏற்பாடுகளை சிறப்புறச் செய்திருந்தார்கள்.



திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் ஆலயத்தில் பக்தர்கள் பயன்பாட்டிற்காக ''குளிர் குடிநீர்'' வசதியை அண்மையில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் திறந்து வைத்தார்கள். திருக்கோயில் இணை ஆணையாளர்/செயல் அலுவலர் திரு மு.க. பாலசுப்பிரமணியம் அவர்களும், அறங்காவலர் குழுத்தலைவர் திரு டெக்கான் என்.கே. மூர்த்தி மற்றும் அறங்காவலர் பெருமக்களும் விழா ஏற்பாடுகளைச் சிறப்புகளைச் செய்திருந்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,** 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.